வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 01.12.2022 வியாழக்கிழமை | இதழ் : 358 | பக்கங்கள் : 16

# அரசியல் தீர்வு பொறிமுறையை உருவாக்க சகல தமிழ் தேசிய கட்சிகளும் இணையுங்கள்

## தமிழீழ விடுதலை இயக்கம் அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 01

எமது இனத்தின் உறுதியான அரசியல் தீர்வுக்கான ஒரு பொறிமுறையை நாம் கொண்டிராமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானது. இதை நாங்கள் இப்போது தீர்க்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. கூட்டமைப்புகள், கூட்டணிகள், கட்சிகள், கட்சி நிலைப்பாடுகள், கொள்கைகள், தேர்தல் நோக்கங்கள் என்பவற்றைத் தாண்டி இந்த பொறிமுறையை வகுத்து உருவாக்கி, செயல்படுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அழைப்பு விடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் பேச்சாளர் கு. சுரேந்திரன் இது குறித்து விடுத்துள்ள அறிக்கையில்,

அரசியல் தீர்வுக்கான பொறிமுறையை உருவாக்க தமிழ்த் தேசியத் தரப்புக்கள் ஒருமிப்பது அவசியம் - ரெலோ கோரிக்கை

சமஷ்டி முறைதான் எமது அரசியல் தீர்வு என்பதில் தமிழ்த் தேசியத் தரப்பினரிடம் தெளிவும் உறுதியும் உள்ளன. ஆனால், அதை அடையும் வழியும் பொறிமுறையும் எம்மிடம் இல்லை. அதை வகுப்பது மிக அவசியம்.

தென்னிலங்கை தலைவர்கள் அழைக்கும் போதெல்லாம் நாம் சென்று பேசுவதால் மாத்திரம் எமது அரசியல் தீர்வு சாத்தியமாகாது. இப்படியே பயணிப்பதால் அரசியல் இலட்சியங்களை நாங்கள் அடைய முடியாது. அதை அடைவதற்கான பொறிமுறையே எமது தீர்வை சாத்தியமாக்கும்.

நிரந்தரமான அரசியல் தீர்வுக்காக தமிழர்கள் பல காலமாக வெவ்வேறு வழிகளில் போராடி வருகிறோம். மாறி வரும்

15

# இரண்டு கட்டங்களாக மின் கட்டணம் எகிறும்!

## அனுமதி வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, டிசெம்பர் 01

**2023 ஜனவரியிலும், ஜூனிலுமாக இரு கட்டங்களாக மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

இலங்கை மின்சார சபையின் தற்போதைய இழப்பை ஈடுகட்ட மின்சார கட்டணம் சுமார் 70வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் என்று பொருளாதார உறுதித்தன்மைக்கான தேசிய பேரவை துணைக் குழுவிடம் மின்சார சபையின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் மின்சார கட்டணங்கள் அதிகரிக்

15

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் ஆதாரங்களை அழித்தது அரசு

## லக்ஷ்மன் கிரியெல்ல சாடல்



கொழும்பு, டிசெ. 01

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதன்போது கப்பல் தரித்திருந்த இடத்திலிருந்து துறைமுகத்துக்குள் வரும் வரையிலான சி. சி. ரீ. வி காட்சிகள் திட்டமிட்ட வகையில் அழிக்

15

## அனலைதீவு - பருத்தித்தீவில்

# கடலட்டை பண்ணைகளை அகற்றுமாறு போராட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 01

அனலைதீவு - பருத்தித்தீவு பகுதியில் கடற்றொழிலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணைகளை உடன் அகற்றுமாறு கோரி அப்பகுதி கடற்றொழிலாளர்கள் நேற்று தொழில் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை கடலட்டை பண்ணைகளை அகற்றும் வரை தமது

போராட்டம் தொடரும் என்று அனலைதீவு 3ஆம் வட்டார கடற்றொழிலாளர்கள்

15

# சுகாதார அவசரகால நிதியாக இந்திய கடனில் 20 கோடி டொலர்!

## அமைச்சரவை ஒதுக்கியது

கொழும்பு, டிசெ. 01

இந்தியன் கடன் தொகையிலிருந்து 20 கோடி டொலர்களை சுகாதார துறையின் அவசர தேவைகளை பூர்த்தி செய்யப் பயன்படுத்தப்படவுள்ளது என்று அமைச்சின் ஆலோசனை குழுவிடம் சுகாதார துறை கெஹலிய ரம்புக்வெல நேற்று தெரிவித்தார்.

இந்தியாவிடம் கடனாக பெறப்பட்ட 100

15

# இந்தியாவுக்கு செல்வோர் முற்பாதுகாப்பை பெறுக!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிசெ. 01

இந்தியாவுக்கு தல யாத்திரைகள் செல்ல இருப்பவர்கள் சுகாதார முற்பாதுகாப்பு ஆலோசனைகளை பின்பற்றி மலேரியா தொற்றிலிருந்து எம்மையும் எமது நாட்டையும் பாதுகாக்க வேண்டும் என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இந்த

15

# மாவட்ட அபிவிருத்தி குழுக்கள் மாகாண சபைகளுக்கு பதிலல்ல!

## ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விளக்கம்!

கொழும்பு, டிசெ. 01

மாகாண சபைகளுக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை ஸ்தாபிக்க ஜனாதிபதி தயாராகி வருகிறார் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தச் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "ஜனாதிபதி ரணில் விக்ரம

15

# சிறந்த சுற்றுலா தலமாக மட்டக்களப்பை மாற்ற திட்டம்!

## ஜனாதிபதி தலைமையில் உரையாடல்

கொழும்பு, டிசெ. 01

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான இடங்களை தெரிவு செய்வது தொடர்பிலான கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று

15

# உறுப்புரிமையை இழக்க நேரிடும்! ஐ. சி. சி. இலங்கைக்கு எச்சரிக்கை!!

டுபாய், டிசெ. 01

அரசியல் தலையீடுகள் தொடருமானால் அதன் விளைவுகளை இலங்கை கிரிக்கெட் அணி சந்திக்க நேரிடும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி) எச்சரிக்கை விடுத்துள்ளது.

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

அப்போது யுத்தம் நடந்துகொண்டிருந்த காலம். தெற்கின் பிரபல அரசியல்வாதி ஒருவர் சொன்னது இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது. விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இராணுவத்துக்கு மிகப்பெரிய இழப்புக்கள் ஏற்பட்டுவிட்டால், உடனே தெற்கில் அது பற்றிய செய்திகள் வெளிவராமல் தடுப்பதற்காக, அல்லது அதனால் தெற்கில் பாரிய கலவரம் ஏதேனும் ஏற்படாமல் தடுப்பதற்காக இலங்கை உலகக்கிண்ணத்தை வெற்றிபெற்ற கிரிக்கெட் போட்டியை ரீ. வியில் மறுஒளிரப்புச் செய்துவிடுவோம். மக்கள் எல்லாம் அதனைப் பார்த்துக்கொண்டு மகிழச்சியில் இருப்பார்கள்.

அதாவது ஒரு பிரச்னை பூதாகாரமாக வெடிக்கின்றபோது மக்களை திசைதிருப்புகின்ற பாணி அது.

அதனை சில அரசியல் நெருக்கடிகள் ஏற்படுகின்றபோதும், அதனை மறைக்க இன்னுமொரு பிரச்னையை கிளப்பிவிடுவார்கள்.

அது அரசியலில் சாதாரண விடயம்தான்.

சில காலங்களுக்கு முன்னர், வடக்கில் எப்போதும் பேசுபொருளாக இருந்தது, தமிழக மீனவர்களின் அத்துமீறல்கள் பற்றிய செய்திகள்தான். எல்லைதண்டி வந்து மீன்பிடிப்பது - அதுவும் இலங்கையில் தடை செய்யப்பட்ட இழுவைப் படகுகளில் நூற்றுக்கணக்கில் வந்து மீன்பிடியில் ஈடுபடுவது, எமது மீன்வளத்தையே இல்லாமல் செய்துவிடுகின்ற அனர்த்தம் என்பதால் எமது மீனவர்கள் தொடர்ச்சியாக போராட்டம் நடத்திக்கொண்டிருந்தார்கள். இப்போது அதுபற்றிய குரல்களைக் காணவில்லையே, அவர்கள் இப்போது வருவதில்லையோ என்று நினைத்துக் கொண்டிருந்தபோதுதான், அண்மையில் வல்வெட்டித்துறை வரை பல படகுகள் அத்துமீறியது மாத்திரமன்றி, நமது மீனவர்களின் படகுகளையும் சேதப்படுத்திய செய்தி வெளிவந்தது.

அந்த மீன்பிடியின் பின்னால், சில அரசியல்வாதிகள் இருப்பதும், அவர்களே இந்த நூற்றுக்கணக்கான இழுவைப் படகுகளுக்கும் சொந்தக்காரர்கள் என்பதையும் இந்தப் பத்தியில் முன்னரும் பல தடவை சொல்லிவந்திருக்கின்றோம்.

இப்போது, வடக்கில் அதைவிட முக்கியமான பிரச்னையாக இருப்பது இந்தியாவிலிருந்து வரும் இழுவைப் படகுகள் அல்ல. அதில் வரும் போதைப் பொருள்கள்தான்.

இவ்வாறு போதைப்பொருட்களின் வருகை வடக்கில் மாத்திரமன்றி முழு நாட்டையும் இப்போது உலுப்பி எடுக்கின்றது. மேலே சொன்னதுபோல, ஒரு பிரச்னையை மறைக்க இன்னுமொரு பிரச்னையை கையில் எடுப்பதுபோல, மீனவர் பிரச்னைக்கு பதிலாக போதைப்பொருள் பிரச்னையை எடுத்திருக்கிறோமே தவிர மீனவர் பிரச்னை இப்போதும் அப்படியே இருந்துகொண்டுதான் இருக்கின்றது. ஆனால், அதே மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு பதிலாக போதைப்பொருளை கொண்டுவந்தால் அதிக இலாபம் கிடைக்கும் என்று நினைக்கிறார்களோ என்னவோ?

தினமும் கேரள கஞ்சா எங்காவது ஓர் இடத்தில் பிடிபட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், இன்றுவரை அதனை இங்கு கொண்டுவரும் எந்தப் பெரிய 'முதலை'யும் பிடிபட்டதாகத் தெரியவில்லை.

நேற்றுமுன்தினம் தமிழக தினமலர் பத்திரிகையில் வந்திருந்த செய்தி இது.

'இராமேஸ்வரம் அருகே இலங்கைக்கு கடத்த முயன்ற, 360 கோடி ரூபாய் மதிப்பிலான, 'கோகைன்' போதைப் பொருளை, கடற்படை பொலிஸார் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக, கீழக்கரை நகராட்சி தி.மு.க. கவுன்சிலர், முன்னாள் கவுன்சிலர் கைது செய்யப்பட்டனர்.'

இதுதான் அந்தச் செய்தி.

அந்தச் செய்தியை வழக்கமான செய்திகளில் ஒன்றாக கடந்து செல்ல முடியவில்லை. அங்கே கைப்பற்றப்பட்டிருப்பது, இந்திய ரூபாய்களில் முன்னூற்றி அறுபது கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள். அவை இலங்கைக்கு ஒரு நாட்டுப்படகில் கடத்திச் செல்லப்படவிருந்ததாகவும் பொலிஸார் தமது விசாரணைகளில் கண்டறிந்துள்ளனர் என்கின்றது செய்தி.

முன்னூற்றி அறுபது கோடி என்பது இலங்கையில் இலங்கை ரூபாய்களில் ஆயரத்தி அறுநூறு கோடிகளுக்கும் அதிகம். அத்தனை கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருளை ஒருவர் கடனாக இங்குள்ள ஒருவருக்கு கொடுக்கப்போவதில்லை. அப்படியெனில் இத்தனை கோடி ரூபாயை அதில் முதலிட்டு இலங்கைக்கு கொண்டுவரக்கூடிய வர்த்தகர்கள் யார் என்பதை கண்டறிவது இலங்கைப் பொலிஸாருக்கு சிரமமானதாகவும் இருக்காது.

இந்த கடத்தல் வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள், தமிழக ஆளும் கட்சியான தி. மு. கவினர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது.

அவர்களிடம் இலங்கை பொலிஸாரும் விசாரணை நடத்தி, அவர்களின் இங்குள்ள தொடர்பைக் கண்டறிய வேண்டும்.

இது நடக்காது என்பதும் நமக்கு தெரியாததல்ல. ஏனெனில், இத்தனை பெரிய தொகையோடு விளையாடி இந்த வர்த்தகத்தில் இருப்பவர்களும் சாதாரணமானவர்களாக இருக்கமுடியாது.

ஆனால், அது குறித்து இந்த சமூகத்தை நேசிக்கின்ற தலைவர்கள் யாராவது இருந்தால், அவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்பதற்காகவே இந்தப் பத்தி.!

**- ஊர்க்குருவி**

## மணல்கடத்தலை தடுத்த இளைஞர்மீது தாக்குதல்!

வடமராட்சி, டிசெ. 01

சட்டவிரோத மணல் அகழ்வு, கடத்தலை மேற்கொண்டவர்களை விசேட அதிரடிப் படையினரிடம் பிடித்துக் கொடுத்த இளைஞரை சிலர் இணைந்து தாக்கிய நிலையில் அவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குடத்தனை - வலிக்கண்டியை சேர்ந்த 19 வயதான பவானந்தராசா தர்சியன் என்ற இளைஞரே இவ்வாறு காயமடைந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கடந்த திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் வலிக்கண்டியில் சட்டவிரோதமான முறையில் வாகனம் ஒன்று மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்தது. இதனை அவதானித்த அந்தக் கிராம இளைஞர்கள் அவர்களை பிடித்து விசேட அதிரடிப் படை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் மணல்கடத்தல் காரர்களுடன் தொடர்புடைய சிலர், மணல் கடத்தலை தடுத்த இளைஞரை கடுமையாக தாக்கினர். அத்துடன், அவருக்கு அச்சுறுத்தலும் விடுத்தனர் என்று தெரிய வருகிறது.

(ஐ-02)

## கட்டைக்காட்டில் சட்டவிரோத சுருக்கு தொழில் அதிகரிப்பு!

வடமராட்சி, டிசெ. 01

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் சட்டவிரோத சுருக்குவலை தொழில் மீண்டும் தலைதூக்கியுள்ளது என்று தெரிய வருகின்றது.

அண்மைக்காலமாக கட்டைக்காடு மீனவர்கள் கடல் வளத்தை அழித்துவருகின்றனர் என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்ட நிலையில் தொடர்ந்தும் 400 இற்கும் மேற்பட்ட படகுகள் சுருக்கு வலை தொழிலுக்காக ஆழ் கடலுக்கு சென்று வருகின்றன என்று கூறப்படுகின்றது.

நீரியல் வளத்துறையினரால் அடிக்கடி எச்சரிக்கப்பட்ட போதும் அப்பகுதி மீனவர்கள் அந்தத் தொழிலைக் கைவிடாமல் தொடர்ந்து மேற்கொள்கின்றார்கள்.

இதனால் சிறு தொழிலாளர்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

நீண்ட காலமாக இந்த சட்டவிரோத தொழிலுக்கு முடிவு கட்டத்தவறிய கடற்றொழில் அமைச்சரும் கட்டைக்காடு மீனவர் சங்கமுமே இதற்கு பொறுப்பு என்றும் இனியும் தாமதிக்காமல் சுருக்குவலை தொழிலை தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மீனவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஐ-02)

## யூ - ரியூப் காணொலி பார்த்து 'ஸ்னைப்பர்' செய்தவர் கைது!

கொழும்பு, டிசெ. 01

யூ - ரியூப்பை காணொலியைப் பார்த்து, ஸ்னைப்பர் துப்பாக்கியை தயாரித்தவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு - வாதுவையில் வைத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர், சில காலமாக போதைப்பொருளுக்கு அடிமையாகி புனர்வாழ்வு பெற்றவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கழிவு பிளாஸ்ரிக் பாகங்கள், வெள்ளிப்பாகங்கள், ஸ்பிரிங், இரும்பு மற்றும் அலுமினிய குழாய்கள், பைனாகுலர் என்பவற்றை பயன்படுத்தி அவர் இந்த துப்பாக்கியை உருவாக்கியுள்ளார்.

அத்துடன், பூனைகள், நாய் கள் மற்றும் பறவைகளை இந்த துப்பாக்கியினால் சுட்டதாகவும், சுடப்பட்ட பறவைகள், விலங்குகள் அதே இடங்களில் வீழ்ந்து இறந்தன என்றும் சந்தேகநபர் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

## உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் 2 பில்லியன் அமெ.டொலர்களைப் பெற பேச்சு!

கொழும்பு, டிசெ. 01

சுமார் 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெறுவதற்கு உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இலங்கை கலந்துரையாடி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்துடன் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் திட்டத்திற்கான ஊழியர் மட்ட உடன்பாட்டை எட்டியுள்ளது.

கடன் மறுசீரமைப்புப் பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்து ஜனவரியில் சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதியைப் பெறுவதற்கு இலங்கை முயற்சி மேற்



கொண்டுள்ளது.

இதேவேளை, நாணய நிதியத்தின் அனுமதி கிடைத்தவுடன், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பலதரப்பு கடன் வழங்குநர்கள் இலங்கைக்கு மீண்டும் கடன் வழங்க முடியும் என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி சுமார் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை, கொள்கைக் கடனொன்றின் மூலம் இலங்கைக்கு கிட்டத்தட்ட 700 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்குமெனக் குறிப்பிட்டார்.

ஜப்பான் அரசாங்கமும் நிதியுதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளதாகவும், பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் திட்டங்களுக்கு இவ்வாறான கடன்கள் வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

(அ)

ஈழநாடு
Eelanadu
01.12.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இந்து மதத்தின் மீதான கரிசனை?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்து மதத்தைப் பாதுகாப்பது தொடர்பில் பேசியிருக்கின்றார். இந்தியாவில் இருப்பது போன்று இலங்கைத் தீவிலும் இந்து மதத்தின் தனித்துவத்தை பாதுகாக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். இந்துக்கள் மட்டுமல்லாது தென்னிலங்கையிலுள்ள பௌத்த விகாரைகளிலும் இந்துக் கடவுளர்களை வழிபடுவதாகவும் ரணில் குறிப்பிட்டிருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்க ஏன் திடீரென்று இந்து மதத்தின் தனித்துவம் தொடர்பில் பேசுகின்றார்? இந்தியாவில் ஆளும் பி. ஜே. பி. அரசாங்கத்தை அணுகுவதற்கான ஒரு துருப்புச்சீட்டாக இதனை நோக்குகின்றாரா அல்லது உண்மையிலேயே இந்து மதத்தின் தனித்துவம் தொடர்பில் கரிசனை காண்பிக்கின்றாரா? ஏனெனில், பி. ஜே. பி. ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து இந்துத்வா சக்திகளை அணுக முற்படும் போக்கொன்றும் முகம்காட்டியது. இந்தியாவுக்கான தூதுவர் மிலிந்த மொறகொட ஆர். எஸ். எஸ். அமைப்பின் தலைவரை சந்தித்திருந்ததையும் இந்த இடத்தில் சுட்டிக்காட்டலாம்.

பௌத்தம் அரச மதமாக இருப்பதால் பௌத்தத்துக்கு சமனான முன்னுரிமை இந்து மதத்துக்கு வழங்கப்படவில்லை. இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து, இந்து மதத்தின் வளர்ச்சிக்காக அரசாங்கம் எந்தவொரு பிரத்தியேக வேலைத்திட்டத்தையும் முன்னெடுத்ததில்லை. இந்து மதம் அதனைப் பின்பற்றும் மக்களின் முயற்சியால் மட்டுமே பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இன்றும் நூற்றுக்கணக்கான இந்து ஆலயங்கள் கவனிப்பாரற்ற நிலையிலேயே இருக்கின்றன. அதேவேளை, பௌத்தத்தை செழிப்புறச் செய்வதற்கு ஒதுக்கப்படும் நிதியில், ஒரு சிறியளவுக்குக்கூட, இந்து மதத்தின் வளர்ச்சிக்காக ஒதுக்கப்படுவதில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ரணில் விக்கிரமசிங்க ஆச்சரியமளிக்கத்தக்க வகையில் இந்து மதத்தின் தனித்துவத்தை பாதுகாக்க வேண்டுமென்று கூறுகின்றார்.

இதேவேளை, அவர் வரலாற்றாய்வு நிலையம் ஒன்றையும் உருவாக்கவுள்ளதாகத் தெரிவித்திருக்கின்றார். இந்தியாவில் இருப்பதை விடவும் இலங்கைத் தீவிலுள்ள இந்துமதம் தொடர்பில் ஆராய வேண்டுமென்று கூறுகின்றபோது, ஒரு விடயத்தை தென்னிலங்கையின் ஆளும் வர்க்கம் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, 84 கோடிக்கு மேற்பட்ட இந்துக்களை பெரும்பான்மை மக்களாகக் கொண்டிருக்கும் இந்தியாவில் இந்து மதம் அரச மதமல்ல. இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடாகவே இருக்கின்றது.

இலங்கையில் பௌத்தம் ஓர் அரச மதமாக இருப்பதும் இலங்கையின் இனப் பிரச்னைக்கான தீர்வை காண்பதற்கு ஒரு தடையாகவே இருக்கின்றது. பௌத்த பிக்குகளுக்கு வழங்கப்படும் விசேட சலுகைகள் அவர்களை அதிகாரம்மிக்க ஒரு தரப்பாக மாற்றியிருக்கின்றது. தென்னிலங்கையின் ஆட்சியாளர்களின் ஒவ்வொரு நகர்வுகளையும் தீர்மானிப்பதில் பௌத்த மகா சங்கம் பிரதான பங்குவ கிக்கின்றது. ரணில் விக்கிரமசிங்கவை ஒரு தீவிர பௌத்தவாதியாகக் கருத முடியாது. அடிப்படையில் மதவாத சிந்தனைகளில் ஈடுபாடில்லாத ஒருவராகவே ரணிலின் அரசியல் வாழ்வு இருந்திருக்கின்றது. இதற்கு அவரின் மேற்குலகு சார்பான தாராளவாத சிந்தனையும் ஒரு காரணமாகும்.

ஆனாலும், ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளும் விடயத்தில் பௌத்த மகா சங்கத்தினரை அனுசரித்து செல்ல வேண்டிய தேவையை ரணிலாலும் நிராகரிக்க முடியுமாவென்பது கேள்விக்குறிதான்.

இலங்கையில் இந்து மதத்தை பாதுகாக்க வேண்டுமாயின் பௌத்தத்தின் தாய் மதமான இந்து மதத்தையும் அரச மதமாக மாற்றுவதன் மூலம் அதனை இலகுவாக செய்யலாம். அவ்வாறானதொரு மாற்றம் நோக்கி சிந்திக்க ரணில் விக்கிரமசிங்கவால் முடியுமா? தென்னிலங்கையின் ஆட்சியாளர்களால் முடியுமா?

# ஏனைய அரசியல் கைதிகளையும் மன்னிப்பளித்து விடுதலை செய்க!

### ஜனாதிபதிக்கு அவுஸ்திரேலிய அமைப்பு கடிதம்

*சிட்னி, டிசெ. 01*

நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் சிலரை விடுதலை செய்தமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி தெரிவித்ததுடன், ஏனையோரையும் விரைவாக விடுதலை செய்ய வேண்டும் என்று அவுஸ்திரேலியா - இலங்கை நண்பர்கள் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்ட அந்தக் கடிதத்தில்,

துரதிரஷ்டவசமாக, சட்டப்படி குற்றப் பத்திரிகை வழங்கப்படாமல் இன்னும் நூற்றுக்கணக்கானவர்கள் சிறையில் இருக்கிறார்கள். இவர்கள் குற்றவாளிகளா, குற்றம் சுமத்தப்பட்டவர்களா அல்லது இன்னும் குற்றம் சுமத்தப்படாதவர்களா என்பதைப் பொருட்படுத்தாமல் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு எல்லா நடவடிக்கைகளும் சட்டப்படி எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டம் கடுமையானது - விரும்பத்தகாதது. எனினும் தவிர்க்க முடியாமல் உருவாக்கப்பட்டது என்பதை இலங்கை அரசு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஏற்றுக்கொண்டது.

குறிப்பிட்ட இந்தச் சட்டத்தை நீக்க இலங்கை அரசு பல முயற்சிகளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மேற்கொண்டு, ஏற்றுக்கொள்ளக்கூடிய உள்நாடு மற்றும் வெளிநாட்டுக் கோட்பாட்டுக்கு இணங்க புதிய சட்டம் ஒன்று இயற்றப்படவேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் கைதான பெரும்பாலானவர்களுக்கு எதிராக கிடைக்கும் ஒரே சாட்சியான அவர்களின் விருப்பத்துக்கு மாறாக பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் பெறப்பட்ட வாக்குமூலமானது நடைமுறையில் சட்டப்படி ஏற்றுக்கொள்ள முடியததாகும்.

அவர்கள் மீதான வழக்கைத் தொடர்வதற்கு வழக்குகள் தயாராக இல்லாததால்

இவ்வழக்குகளில் அநேகமானவை ஒத்திப்போடப்பட்டுள்ளன. அவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைவரும் வெகுகாலமாக காவலில் இருக்கிறார்கள்.

அவர்களை காவலில் எடுத்த உடனேயே நீதிவிசாரணை மேற்கொண்டிருந்தால், அவர்களுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும்.

ஜனாதிபதி அண்மையில், அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பளித்து விடுதலை செய்தது போன்று ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பில் விடுதலை செய்ய வேண்டும் என்று கோருகிறோம் - என்றுள்ளது. (ஐ)

# யாழ். பல்கலைக்கழகத்தில் கருவுறுதல் விழிப்புணர்வு!

*யாழ்ப்பாணம், டிசெ. 01*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பெண்நோயியல் மற்றும் மகப்பேற்றுத் துறையும் சத்திர சிகிச்சை துறையும் இணைந்து நடத்தும் கருவுறுதல் தொடர்பான விழிப்புணர்வு தினமும் மருத்துவபீட விரிவுரையாளர்களால் எழுதப்பட்ட "குழந்தையின்மை விளக்கங்களும் தீர்வுகளும்" நூல் வெளியீட்டு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட கூவர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீ சற்குணராசா, கலாநிதி ஆறுதிருமுகன் ஆசியுரைகளையும்

நூலாய்வை உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் ச.கண்ணதாசனும் பீடாதிதி உரையை மருத்துவ பீடபீடாதிபதி ரா. சுரேந்திரகுமாரும் நிகழ்த்தவுள்ளனர்

நிகழ்வின் அங்கமாக, "குழந்தையின்மை பற்றிய விளங்கங்களும் தீர்வுகளும்", என்னும் நூல் வெளியிடபபடவுள்ளது. அத்துடன், குழந்தையின்மையால் ஏற்படும் சவால்களையும் தீர்வுகளையும் மையப்படுத்திய "ஆணிவேர் நாடக ஆற்றுகையும் குழந்தையின்மை பற்றிய விழிப்புணர்வு சார்ந்த உரையாடலும் மருத்துவ பீட விரிவுரையாளர்களால் முன்னெடுக்கப்படவுள்ளது. (ஐ)


# திருமுறை விண்ணப்பம்

*யாழ்ப்பாணம், டிசெ. 01*

சிறுவர்கள் கல்வியிலும் கலைகளிலும் மேன்மையான நிலைபெறும் வண்ணம் சிவநெறிய திருமுறை விண்ணப்பம் - தொடர் 91 இன்று வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

மெய்நிகர்வழியில் நடைபெறும் இந்த நிகழ்வில் சூம் செயலி மூலம் 417 892 9023 என்ற அடையாள எண் மூலம் 202811 என்ற கடவுச் சொல்லைப் பயன்படுத்தி இணைந்து கொள்ள முடியும். Dr sivasri vythees wara kurukkal என்ற யூ-ரியூப் சனல் மூலமாகவும் இதில் பங்கேற்கலாம். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

நண்பர்களின் ஆதரவுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். மனதில் இருந்த குழப்பங்கள் விலகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும்.

**இடபம்**

புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். மகிழ்ச்சி கூடும். அலுவலகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். உங்கள் செயல்கள் மற்றவர்களால் புகழப்படும். பழைய பிரச்னை முடிவிற்கு வரும்.

**மிதுனம்**

எதிர்பார்த்த வருவாய் உண்டு. வசதி வாய்ப்புகள் கூடும். புதிய பொருட்கள் வாங்குவீர்கள். வருமானத்தில் ஏற்பட்ட தடைகளை சரி செய்வீர்கள். குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்**

மனதில் தேவையற்ற குழப்பங்கள் உண்டாகும். எதிரபார்ப்புகள் தள்ளிப் போகும். விரோதிகளின் கை மேலோங்கும். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். பொருளாதார நெருக்கடிக்கு ஆளாவீர்கள்.

**சிம்மம்**

திட்டமிட்டு செயல்பட்டு நினைத்ததை சாதித்துக் கொள்வீர்கள். தடைகள் விலகும். ஆரோக்கியத்தில் இருந்த சங்கடங்கள் அகலும். நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும் நிரந்தர வருமானத்திற்கு வழி காண்பீர்கள்.

**கன்னி**

உற்சாகத்துடன் செயல்படுவீர்கள் என்றாலும் உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிக்கு வாய்ப்பு உண்டாகும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**துலாம்**

துணிச்சலுடன் செயல்பட்டு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வருமானம் கூடும். திட்டமிட்டிருந்த செயல்களில் மாற்றம் செய்வீர்கள். உங்கள் முடிவு லாபத்தை உண்டாக்கும்.

**விருட்சிகம்**

திருமண வயதில் இருப்பவர்களுக்கு வரன் தேடி வரும். சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். வேலை வாய்ப்பிற்காக மேற்கொண்ட முயற்சியில் வெற்றி உண்டாகும். மனக்குழப்பம் தீரும்.

**தனுசு**

தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். சகோதரர்கள் உங்களுக்கு உதவி செய்வர். புதிய சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். நீண்ட நாள் பிரச்னை ஒன்றில் இன்று நல்ல முடிவு ஏற்படும்.

**மகரம்**

குடும்பத்தினரின் தேவையை நிறைவேற்றுவீர்கள். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். எதிர்பார்த்த செய்தி வரும். மனம் மகிழும்படியான சம்பவம் ஒன்று நடைபெறும். குடும்ப நலனில் உங்கள் மனம் செல்லும்.

**கும்பம்**

உங்கள் எண்ணங்கள் நிறைவேறும் நாள். தொழிலை விரிவு செய்ய முயற்சிப்பீர்கள். உங்களது செயல்களில் சில தடைகள் உண்டாகும். அமைதி காப்பது நலமாகும். புதிய முயற்சி ஒன்றை மேற்கொள்வீர்கள்.

**மீனம்**

செலவுகள் அதிகரித்தாலும் உற்சாகமாக செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். உங்கள் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். புதிய சொத்து வாங்கும் முயற்சி தள்ளிப்போகும். எதிர்பார்ப்புகள் ஏமாற்றம் தரும்.

# ஜல்லிக்கட்டு காளைகள் குடும்ப உறுப்பினர்களே!

## உச்சநீதிமன்றம் தெரிவிப்பு

*புதுடில்லி, டிசெ. 01*

*ஜல்லிக்கட்டு காளைக ளுக்கு தனியாகப் பயிற்சி அளிப்பதோடு, அந்த காளை களை தங்கள் சொந்த குடும்ப உறுப்பினராகவே பாவிக்கின் றனர் - என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.*

*உச்ச நீதிமன்றத்தில் ஜல் லிக்கட்டு தொடர்பான வழக்கு விசாரணை 3ஆவது நாளாக நேற்று நடைபெற்றது.*

*இதில் பீட்டா அமைப்பு சார்பில் வக்கீல் சியாம் திவான் ஆஜராகி வாதாடினார். அவர் வாதாடுகையில், “பாரம்பரிய காளை இனங்களை காப்பாற்றுவதற்காக தான் ஜல்லிக்கட்டு நடத்தப் படுகிறது என கூறுவதை ஒருபோதும் ஏற்கமுடியாது. இது ஜல்லிக்கட்டு காளைகளுக்கு இழைக்கப்படும் கொடூரம்“ என்றார்.*

*இந்த நீதிமன்றம் முன்னர் ஜல்லிக்கட்டில் இருக்கும் நடைமுறைகளை கொடூரம் என்றதே தவிர, ஜல்லிக்கட்டு விளையாட்டே கொடூரமானது என கூறவில்லை. மேலும் தற்போது ஜல்லிக்கட்டுக்கு என சட்டம் உள்ளது. உரிய வழிமுறைகள் வகுக்கப்பட் டுள்ளன. எனவே, அந்த விதி முறைகளை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை பாய்கிறது.*

*ஜல்லிக்கட்டு காளைகள் என்பது திடீரென இந்த விளையாட்டில் பயன்படுத்தப்படுவதில்லை. அதற்கான முறையான பயிற்சிகள் வழங்கப்பட்டு தனியாக தேர்ந்தெடுக்கப்பட்டு அவைதானே பயன்படுத்தப்படுகின்றன.*



*1000 ஆண்டுகளாக காளைகளை வைத்து இத்தகைய போட்டிகள் நடத்தப்படுகிறது. இந்தபோட்டிக்காக காளைகள் தனியாக பழக்கப்பட்டு வருகின்றன. ஜல்லிக்கட்டு காளைகளுக்கு தனியாகப் பயிற்சி அளிப்பதோடு, அந்த காளைகளை தங்கள் சொந்த குடும்ப உறுப் பினராகவே பாவிக்கின்றனர். ஆனால், காளைகளுக்கு கொடுமை இழைக்கப்படுவதை அனுமதிக்க முடியாது.*

*மேலும் தற்போது அவ்வாறான எந்த விதி மீறலும் நடைபெறுவதாக தெரியவில்லை. மேலும் இந்த போட்டிகளுக்கான விதிமுறை வகுக்கப்பட் டுள்ளதால் அதனை கட்டாயம் அமுல்படுத்த வேண்டும். ஜல்லிக்கட்டு விவகாரத்தில் விதிகளை அமல்படுத்த வேண்டும் என்பதே முக்கி யம். மேலும், ஜல்லிக்கட்டு நடைமுறையை மாற்ற வேண் டும் என்பது அல்ல - இவ்வாறு நீதிபதிகள் கூறினார்கள்.*

*(ஐ)*

# தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு முழுமையாக சீர்குலைந்துள்ளது

## எடப்பாடி பழனிசாமி



*சேலம், டிசெ. 01*

*”கடந்த 10 ஆண்டுகால அ. தி. மு. க. ஆட்சியில் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக பராமரிக்கப்பட்டது. பிரபல பத்திரிகை ஒன்று, இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களில் ஆய்வு செய்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் தமிழகம் சிறந்த மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு அதற்கான விருதும் வழங்கப்பட்டது” என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.*

*எமது ஆட்சியில் தமிழகம் அமைதிப் பூங்காவாக திகழ்ந்து கொண்டிருந்தது. இன்றைய நிலை என்ன? 3 மாதங்களுக்கு முன்பு, சென்னை சுற்றுவட்டாரத்தில் 36 மணி நேரத்தில் 12கொலைகள் நடந்துள்ளன.*

*36 மணி நேரத்தில் 12 கொலைகள் நடக்கிறதென்றால், சட்டம் ஒழுங்கு எப்படி இருக்கிறது என்பதை முதல்வர் எண்ணிப் பார்க்க வேண்டும். எந்தளவுக்கு சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். சட்டம் ஒழுங்கு அடியோடு சீர்குலைந்துவிட்டது, படுபாதாளத்துக்கு போய் விட்டது - என்றார். (ஐ)*

# தூத்துக்குடியில் துப்பாக்கி சூடு நடத்தியோர் தண்டனையின்றி தப்பிக்கக்கூடாது!

## பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்து

*சென்னை, டிசெ. 01*

*“சாத்தான்குளம் காவல் நிலைய மரணத்தில் சம்பந்தப்பட்ட காவலர்கள் கைது செய்யப்பட்டு கொலை வழக்கை எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால், அதைவிட கொடுமையான தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டுக்கு காரணமானவர்கள் தண்டனையின்றி தப்பிப்பதை அரசு அனுமதிக்கக் கூடாது” என்று பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் கூறியுள்ளார்.*



*“தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக போராடியவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி 13 பேரை கொலை செய்த பொலிஸார்மீது துறை சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே எடுக்கப்படும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படாது என்று தமிழக அரசு அறிவித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது.*

*திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட இந்தக் கொடூரத்தை கொலைக்குற்றமாகவும், கூட்டு சதியாகவும் பார்க்க வேண்டும். அதற்கான தண்டனை வழங்க வேண்டும். ஆனால், இதை சாதாரண விதிமீறலாக மட்டும் கருதி துறை சார்ந்த நடவடிக்கையை மட்டும் அரசு மேற்கொள்வதை ஏற்க முடியாது - என்று கூறினார். (ஐ)*

# கோட்டா, மகிந்தவின் வெளிநாட்டு பயண செலவு ரூபா 40 மில்லியன்!

## தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் தகவல்

கொழும்பு, டிசெ. 01

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் 2021 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஐந்து உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களுக்காக அரசு சுமார் 40 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் வழங்கிய விவரங்களின்படி, ராஜபக்ஷ சகோதரர்கள் இருவரும் கடந்த ஆண்டு ஐந்து உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களுக்காக மொத்தம் 44, 739,184.91 ரூபாய் செலவிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2022 ஜனவரி முதலாம் திகதி ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கை முதலில் நிராகரிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இது தொடர்பான மேல்முறையீட்டை பரிசீலித்த இலங்கை தகவல் உரிமை ஆணைக்குழு, கோரப்பட்ட விவரங்களை ஊடகவியலாளர்களிடம் வழங்குமாறு குறித்த அலுவலகங்களுக்கு உத்தரவிட்டது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அலுவலகங்கள் 14 வேலை நாட்கள் அல்லது 21 நாட்களுக்குள் விவரங்களை அளிக்க வேண்டும் என்றாலும், அவர்கள் பத்து மாதங்களுக்கும் மேலாக எடுத்துக் கொண்டனர்.

கிடைத்த விவரங்களின் படி, சுமார் 36 மில்லியன் (ரூ.36, 970,864.14) ரூபாய் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் இரண்டு வெளிநாட்டு விஜயங்களுக் காக செலவிட்டுள்ளார்.

மேலும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷசு மூன்று உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களுக்கு 7 மில்லியன் செலவிட்டுள்ளார்.

முன்னாள் பிரதமரின் உத்தியோகபூர்வ விஜயங்களுக்கான செலவு மொத்த செலவில் 83 சதவீதமாகும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியூயோர்க், கிளாஸ்கோ மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுக்கான தனது விஜயங்களுக்காக 7,768, 320.77 ரூபாய் செலவிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த விஜயங்களின் நோக்கம் ஜனாதிபதி செயலகத்தால் விளக்கப்படவில்லை.

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, பங்களாதேஷ் மற்றும் இத்தாலிக்கு விஜயம் செய்தார். இத்தாலியில் நடந்த மாநாட்டில் அவரது குடும்ப உறுப்பினர்களில் சிலரும் கலந்துகொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)



# யாழ்.மாநகரசபையின் கழிவுகளை கல்லுண்டாயில் கொட்ட எதிர்ப்பு!

## உழவு இயந்திரங்களை வழிமறித்து போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 01

யாழ். மாநகரசபைப் பகுதியில் சேகரிக்கப்படும் கழிவுகளை கல்லுண்டாயில் கொட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் ஒன்று சேர்ந்து கல்லுண்டாய் வைரவர் கோவிலுக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபை கழிவுகள் தமது பிரதேச சபை எல்லைக்குள் கொட்டப்படுவதுக்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாநகர சபையின் கழிவு களை வலி. தென்மேற்கு பிரதேச சபை உரமாக்குவதற்கு கேட்டதற்கு, மாநகர சபையினர் தாங்கள் இயற்கை உரம் உற்பத்தி செய்வதாகவும், தங்களுக்கே இந்த குப்பைகள் போதாது என்றும் கூறி குப்பைகளை வழங்கவில்லை. பின்னர் குப்பைகளை வீசுகின்றனர் எனப் போராட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

குப்பைகள் கொட்டுவதற்கு வந்த யாழ்ப்பாண மாநகர சபையின் உழவு இயந்திரங்களும் வழிமறிக்கப்பட்டு வீதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. (அ)

# 21ஆயிரம் சிறார்களுக்கு ஊட்டச்சத்து குறைபாடு

கொழும்பு, டிசெ. 01

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் ஊட்டச்சத்து குறைபாட்டுடன் 21,000 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இந்த எண்ணிக்கை 40,000 வரை அதிகரிக்கலாம் எனவும் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டில் 66 ஆயிரம் குடும்பங்களுக்கான உணவு நிவாரணம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மாதாந்தம் 15,000 ரூபா அடிப்படையில் 6 மாதங்களுக்கு குறித்த நிவாரணம் வழங்கப்படும் என உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதி செய்யும் தேசிய வேலைத் திட்டத்தின் பிரதம அதிகாரி, ஜனாதிபதி ஆலோசகர், கலாநிதி சுரேன் பட்டகொட தெரிவித்தார்.

# நல்லூர் பட்ஜெட் வெற்றி!

யாழ்ப்பாணம், டிசெ. 01

நல்லூர் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் ஆளுகைக்குட்பட்ட நல்லூர் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நேற்று புதன்கிழமை தவிசாளர் ப. மயூரனால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் 3 உறுப்பினர்கள், மணிவண்ணன் தரப்பின் 3 உறுப்பினர்கள், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் 4 உறுப்பினர்கள், சுயேச்சைக் குழுவின் 2 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலா ஒரு உறுப்பினர் என 15 உறுப்பினர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 2 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

20 உறுப்பினர்களை கொண்ட நல்லூர் பிரதேச சபையில், இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் 6 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் 5 உறுப்பினர்களும் (மணிவண்ணன் தரப்பு 3, தமிழ் தேசிய மக்கள் முன்னணி 2), ஈழ மக்கள் ஜனநாயக கட்சி சார்பில் 4 உறுப்பினர்களும், சுயேட்சை குழு சார்பில் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் தலா ஒரு உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு 16 மில்லியன் யூரோக்கள் நிதியுதவி

கொழும்பு, டிசெ. 01

ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையில் நிதியிடலுக்காக முன்மொழியப்பட்டுள்ள இலங்கை சமூக சகவாழ்வு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் கருத்திட்டம் மற்றும் பசுமை கொள்கைகளுக்கான உரையாடல்களுக்கு வசதியளித்தல் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்காக 16 மில்லியன் யூரோ நிதியை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

'பசுமை கொள்கைகளின் அடிப்படையிலான இலங்கை' மற்றும் 'உள்ளடக்கப்பட்ட ஒற்றுமையான சமூகத்தை' உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் 2021 தொடக்கம் 2027 வரையான காலப்பகுதிக்காக இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பல்வருட அளவுகோல் கருத்திட்டத்தின் கீழ் நிதியனுசரணை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆசிரியர் இடமாற்றத்துக்கு புதிய பொறிமுறை வருகிறது

கொழும்பு, டிசெ. 01

பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான புதிய பொறிமுறையை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்மொழிந்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய கல்வி அமைச்சர் பிரேமஜயந்த, அரச ஊழியர்களை இடமாற்றம் செய்வது போன்று ஆசிரியர்களை இடமாற்றம் செய்யாமல் மாணவர்களின் தேவைக்கேற்ப பாடசாலைகளில் ஆசிரியர்களை நியமிக்க தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டார்.

ஏனைய அரச நிறுவனங்களைப் போன்று இடமாற்றங்கள் வழங்கப்படுமாயின், பாடசாலைகள் பாடத்திட்டத்தை உள்ளடக்குவதற்குப் போராடும் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார்.

நிர்வாக விடயங்களில் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதாகவும் கல்வி அமைச்சர் உறுதியளித்தார்.

தற்போது புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படாததால் வேலை வாய்ப்பு, தொழிற்சங்க விவகாரங்கள் மற்றும் இடமாற்ற வாரிய மோதல்கள் போன்ற பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் தேவையான தொழில்நுட்பம் காணப்படுகின்ற போதிலும் அது உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (அ)

# தியத்தலாவை நகரில் மண் சரிவு அபாயம்

கொழும்பு, டிசெ. 01

மலையகத்தில் அடை மழை காரணமாக பல்வேறு பகுதிகளில் மண் சரிவும் நிலம் தாழ் இறங்கும் அபாயமும் ஏற்பட்டு வருகின்றது.

ஹப்புத்தளை பிரதேச செயலகப் பிரதேசத்திலுள்ள ஹப்புத்தளை, தியத்தலாவை, கஹகொல்ல, பின்கேதென்ன, கோமாரிகொட மற்றும் பண்டாரவளை, வெலிமடை போன்ற பிரதேசங்களில் பலத்த மழை பெய்து வருவதால் ஹப்புத்தளை பிரதேச சபைக்கு முன்னாலுள்ள தியத்தலாவை ஜும்மா பள்ளிவாசல் கட்டடத்திற்கு பின்னுள்ள அரச வன பிரதேசத்தில் பாரிய மண் சரிவு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அந்த கட்டடத் தொகுதில் அமைந்துள்ள ஜும்மா பள்ளி வாசல், கடைகள் மற்றும் அதன் அருகிலுள்ள வீடுகளில் தங்கி இருப்போரை உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு நகரும்படி ஹப்புத்தளை பிரதேச செயலாளர் அறிவித்தார்.

இதனையடுத்து குறித்த கட்டடத் தொகுதியுள்ள பள்ளிவாசல், கடைகள் மற்றும் வீடுகளில் இருந்து பொருட்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளில் பிரதேச வாசிகள் ஈடுபட்டனர். (அ)

# முக்கிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு கிடையாது

## கூறுகிறார் சுகாதார அமைச்சர்



கொழும்பு, டிசெ. 01

அத்தியாவசியமான 14 மருந்துகளின் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக சீனாவினால் வழங்கப்பட்ட 28 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையைப் பயன்படுத்தியிருப்பதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டில் தற்பொழுது மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாக வெளியாகும் வதந்திகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியிட்ட கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சுகாதாரத் துறையின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக இந்தியக் கடன் உதவியின் கீழ் கிடைக்கப் பெற்ற 200 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளமை குறித்தும் அமைச்சர் மேலும் விளக்கமளித்தார்.

இந்த 200 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேலதிகமாக இந்தியாவிலிருந்து கிடைத்த 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியில் எஞ்சியுள்ள 35 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அந்நியச் செலாவணி நெருக்கடியின் காரணமாக ஏற்பட்டுள்ள கேள்விகளால் இலவச சுகாதாரத்துறை சவால்களை எதிர்கொண்டிருக்கும் சூழ்நிலையில் தனியார் வைத்தியசாலைகள் அதிக கட்டணத்தை அறவிடுவது குறித்தும் இங்கு கவலை வெளியிடப்பட்டது.

அரசாங்க வைத்தியசாலைகளை சரியாகப் பராமரிக்கத் தவறியமை மற்றும் தேவையான மருத்துவ உபகரணங்கள் இன்மையினால் நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளின் சேவையைப் பெற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள் என பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

அடுத்த ஆண்டுக்குள் அரசாங்க வைத்தியசாலை களின் சேவைகளை நாடுவோரின் எண்ணிக்கை 25 வீதம் முதல் 30 வீதம் வரை அதிகரிப்பதைத் தவிர்க்க முடியாது என்று அமைச்சர் கூறினார். நடுத்தர வருமானம் ஈட்டும் குடும்பங்கள் தனியார் வைத்தியசாலையின் வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாத சூழல் ஏற்பட்டுள்ளமையே இதற்குக் காரணம் என அமைச்சர் குறிப்பிட்டார்.

மருத்துவ பணியாளர்களின் இடமாற்றங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. மருத்துவ தொழில்நுட்ப பணியாளர்கள் தாம் வசிக்கும் இடங்களிலிருந்து தூரத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டிருப்ப தால் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றார்கள் என உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

5-6 வருடங்களுக்கு உட்பட்ட அனைவரையும் இடமாற்றம் செய்வது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படவேண்டுமென அமைச்சர் குறிப்பிட்டார்.

(அ)

# இலங்கைக்கு தொடர்ந்தும் உலகவங்கி ஆதரவளிக்கும்

கொழும்பு, டிசெ. 01

நாட்டின் பொருளாதார நிலையை எளிதாக்க அரசாங்கம் எடுத்துள்ள குறுகிய கால நடவடிக்கைகள் திருப்தி அளிப்பதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய நிதி மற்றும் ஏனைய சீர்திருத்தங்கள் தொடர்பில் உலக வங்கியின் பணிப்பாளர் சியோ காந்தா உள்ளிட்ட குழுவினர் பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் கலந்துரையாடினர்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது தொடர்ச்சியான நடுத்தர மற்றும் நீண்ட கால திட்டங்களின் அவசியத்தை வலியுறுத்திய அவர்கள், கடன் மறுசீரமைப்பு திட்டம் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து எதிர்பார்க்கப்படும் கடன் தொகையான 2.9 பில்லியன் டொலர்கள் பெறப்படும் என்று நம்புவதாகவும் தெரிவித்தனர்.

(அ)

# ஜனாதிபதி எதையும் மறைக்கவில்லை!

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 01

ஜனாதிபதி எதனையும் மறைக்காமல் சகல தகவல்களையும் பாராளுமன்றத்தில் முன்வைப்பார் என நம்புவதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க சேவையின் புலனாய்வுத் தலைவர் ஒருவர் ஜனாதிபதியையோ அல்லது அரசாங்கத் தலைவரையோ சந்தித்ததாக தனக்குத் தெரியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அப்படி ஒரு கூட்டம் நடந்தால், அதுகுறித்து அவர் பாராளுமன்றத்தில் அறிவிப்பார் என்றும் எதையும் மறைக்காமல் அனைத்து தகவல்களும் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்படும் என்பது தங்கள் நம்பிக்கை என்றும் அவர் மேலும் கூறினார்.

# இலங்கை சீனாவிடம் இருந்து 7.4 பில்லியன் டொலர் கடன்!

## 2021ஆம் ஆண்டு இறுதிக்குள்

கொழும்பு, டிசெ. 01

2021ஆம் ஆண்டு இறுதிக்குள் இலங்கை சீனாவிடம் இருந்து சுமார் 7.4 பில்லியன் டொலர் கடனைப் பெற்றுள்ளதாக சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது.

இந்தத் தொகை இலங்கையின் மொத்தக் கடனில் சுமார் 20 வீதம் என சீன, ஆபிரிக்கா ஆய்வு முனைப்பு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பல சந்தர்ப்பங்களில் அபிவிருத்தி நோக்கங்களுக்காக சீனாவின் எக்சிம் வங்கியின் ஊடாக கடன்களைப் பெற்றுள்ளது.

இதற்கு மேலதிகமாக, அண்மைய நாட்களில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சீன அரசாங்கம் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மற்றுமொரு நிதி பரிமாற்ற வசதியை வழங்கியது.

இந்த நிதி பரிமாற்ற வசதி, சீன யுவான் நாணயத்தில், இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்பட்டது. மேலும் அந்த பணத்தை செலவழிப்பதற்கு பல ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஓமான், ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள 77 இலங்கையர்கள் அழைத்துவரப்படுவர்

கொழும்பு, டிசெ. 01

ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளில் சுற்றுலா விசாவில் தங்கியுள்ள 77 இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர், பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா இந்த விடயம் குறித்து தெரிவித்தார்.

அதற்கமைய, குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய குழுக்கள் அந்தந்த நாடுகளுக்கு பயணிக்கவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, மனிதக் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட ஓமானுக்கான இலங்கை தூதரகத்தின் முன்னாள் மூன்றாம் செயலாளர் ஈ.குஷான் என்பவரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# விவசாய அமைச்சின் மேலதிக ஊழியர்கள் வேறு நிறுவனங்களுக்கு உடன் இடமாற்றம்



கொழும்பு, டிசெ. 01

விவசாய அமைச்சின் மேலதிக ஊழியர்கள் அனைவரும் செலவு மேலாண்மை குறித்த அரசாங்க கொள்கையின் அடிப்படையில் பிற நிறுவனங்களுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

இது குறித்த அறிவித்தலை பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவித்துள்ளார்.

இதன்படி, விவசாய அமைச்சில் நீண்டகாலமாக கடமையாற்றும் மேலதிக செயலாளர் உட்பட பல திணைக்கள அதிகாரிகள் வேறு நிறுவனங்களுக்கு நியமிக்கப்படவுள்ளதாக அமைச்சு கூறுகிறது.

தற்போது விவசாய அமைச்சில் 03 அபிவிருத்திப் பிரிவுகள், 03 கட்டுப்பாட்டுப் பிரிவுகள், 03 கணக்கியல் பிரிவுகள் மற்றும் 03 போக்குவரத்துப் பிரிவுகள் உள்ள தோடு, பெருமளவான அதிகாரிகள் கடமையின்றி இருப்பதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ)

# முட்டை விலைக்கு எதிரான மனு: விசாரணை டிசெம்பர் 14ஆம் திகதி

கொழும்பு, டிசெ. 01

முட்டை விற்பனைக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து நுகர்வோர் சேவை அதிகார சபையினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றதாக்குமாறு கோரிய மனுவை எதிர்வரும் டிசம்பர் மாதம் 14ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுவை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தாக்கல் செய்துள்ளது.

அந்த மனு நேற்று பிரசாந்த டி சில்வா மற்றும் கே. கே. அந்த. பி. ஸ்வர்ணதீபி ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிபதிகள் அமர்வு முன் அழைக்கப்பட்டது.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் சுமதி தர்மவர்தன, உணவுப் பாதுகாப்புக் குழுவிடமிருந்து முட்டைகள் தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தகவல்களைப் பெற்று, நுகர்வோர் சேவை அதிகாரசபையானது முட்டைக்கான தற்போதைய கட்டுப்பாட்டு விலையை மீள்பரிசீலனை செய்யும் என்று நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

அதன் பின்னர், அது தொடர்பில் கவனம் செலுத்திய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள், மனுவை டிசெம்பர் 14ஆம் திகதி விசாரணைக்கு அழைக்குமாறு உத்தரவிட்டது.

(அ)

# கடன் வாங்கிச் சாப்பிட்டு மகிழ்ச்சியாக இருக்கலாம் என நினைக்கிறார் ரணில்!

## சபையில் விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 01

நாட்டில் உள்ள ஏதாவது ஒன்றை விற்று கையிருப்பில் மூன்று அல்லது நான்கு பில்லியன் பணத்தை போட்டுக் கொண்டு தரப்படுத்தலில் மேல் நோக்கி வந்த பின்னர் கடனை வாங்கி சாப்பிட்டு மகிழ்ச்சியாக இருக்கலாம் என தற்போதைய ஜனாதிபதி நினைப்பதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மத்திய வங்கியும் நிதிய



மைச்சு தனித்தனியாக தீர்மானங்களை எடுக்கின்றன.

இந்த சூத்திரத்தின் மூலம் முன்நோக்கி செல்ல முடியாது. இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சு என்பன தனித்தனியாக நிதி முகாமைத்துவம் தொடர்பான தீர்மானங்களை எடுக்கின்றன.

கைத்தொழிலாளர்களை பாதுகாப்பதன் மூலமே நிதி கட்டமைப்பை பாதுகாத்துக் கொள்ள முடியும். வட்டி வீதம் அதிகரித்துள்ளதால், கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை பாதுகாப்பதிலேயே நாட்டின் நிதி கட்டமைப்பின் பாதுகாப்பு தங்கியுள்ளது. தவறான நிதி முகாமைத்துவ கொள்கையில் இருந்து விடுப்படும் வரை இலங்கையை கைத்தொழில் துறை நோக்கி கொண்டு செல்லமுடியாது - என்றார். (அ)

# கொள்ளையிட முற்பட்ட 6 பேரை மடக்கிப் பிடித்த பிரதேசவாசிகள்!

முல்லைத்தீவு, டிசெ. 01

முல்லைத்தீவு - புதுக் குடியிருப்பு பகுதியில் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட 6 சந்தேகநபர்கள் பிரதேச மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு - சிவநகர் பகுதியில் வீடொன்றை உடைத்து கொள்ளையிட முற்பட்டவர்களே பிரதேச மக்களால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர்.

பிரதேச மக்களால் பிடிக்கப்பட்ட 6 சந்தேகநபர்களும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலத்த காயங்களுக்குள்ளான ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு - இரணைப்பாலை பகுதியை சேர்ந்த ஒருவரும் யாழ்ப்பாணம், சங்கானைப் பகுதியை சேர்ந்த ஐவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் புதுக் குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# முட்டை கட்டுப்பாட்டு விலை மீள்பரிசீலனை செய்யப்படும்

கொழும்பு, டிசெ. 01

முட்டை விலைக்கான தற்போதைய சந்தை கட்டுப்பாட்டு விலையை மீள்பரிசீலனை செய்ய தீர்மானித்துள்ளதாக நுகர்வோர் சேவை அதிகார சபை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவித்தது.

நுகர்வோர் சேவை அதிகாரசபை சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி சுமதி தர்மவர்தன, முட்டை உற்பத்தியாளர் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றை பரிசீலிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரசாந்த டி சில்வா மற்றும் கே.கே.ஏ.பி. ஸ்வர்ணதிப்த ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு பரிசீலிக்கப்பட்டது.

இந்த மனு பரிசீலிக்கப்பட்டபோது, நுகர்வோர் சேவை அதிகாரசபை சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிற்றர் ஜெனரலும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமதி தர்மவர்தன, உணவுப் பாதுகாப்புக் குழுவிடமிருந்து முட்டை தொடர்பான சமீபத்திய தகவல்களைப் பெற்று தற்போதைய கட்டுப்பாட்டு விலையை மீள்பரிசீலனை செய்ய நுகர்வோர் சேவை அதிகாரசபை தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார். (அ)

# கிளிநொச்சி சுகாதார சேவை பணிப்பாளரின் இடமாற்றத்துக்கு சிறிதரன் எம்.பி. ஆட்சேபம்

## சுகாதார அமைச்சருக்கு கடிதம்

கிளிநொச்சி, டிசெ. 01

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றிய ந. சரவணபவனுக்கு வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்திற்கு தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டமைக்கு ஆட்சேபனை தெரிவித்து சுகாதாரஅமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

22.11.2022 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் கிளிநொச்சி கிருஷ்ணபுரம் தொற்று வைத்தியசாலையில் இடம்பெற்ற மோசடிகளுடன் நேரடியாக தொடர்புபட்ட எவருக்கும் எதிராக இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படாத அதே வேளை, திட்டமிட்டுப் பழிவாங்கும் நோக்குடன் பக்கச்சார்பாக அவர் தண்டிக்கப்படுவதாகவே தோன்றுகிறது. இது குறித்த உரிய விசாரணைகள் நடத்தப்பட்டால் அவர் அவரது திணைக்களப் பணியாளர்கள் செய்த குற்றங்களுக்காக அவர்களது பணிப்பாளர் என்ற வகையிலேயே அவர் குற்றச்சாட்டை எதிர்கொள்வது தெரியவரும். ஆகவே முறையான விசாரணைகள் மூலம் குற்றம் செய்த உத்தியோகத்தர்கள் நிரூபணமாகும் வரை அவரை மீண்டும் கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்குமாறு குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள வடமாகாண தொற்றுநோய் வைத்தியசாலையில் நடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட மோசடிகள், முறைகேடுகள் குறித்த விசாரணைகள் நிறைவுபெறும் வரை வைத்தியர் ந.சரவணபவன் தற்காலிக இணைப்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் கடந்த 14.11.2022 தொடக்கம் இணைக்கப்பட்டிருந்தார்

கிளிநொச்சியில் உள்ள வடமாகாண தொற்றுநோய் வைத்தியசாலையோடு தொடர்புபட்ட முறைகேடுகளை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆரம்ப புலன் விசாரணைக் குழுவானது

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கடமையாற்றும் இரு அரச அதிகாரிகள் மற்றும் மூன்று அரச அலுவலர்கள் தாபன விதிக்கோவையின் பிரகாரம் குற்றங்கள் புரிந்துள்ளதாக கண்டறிந்துள்ளது.

இதன் அடிப்படையில் குறித்த நபர்களுக்கு எதிராக மாதிரி குற்றப்பத்திரம் தயாரிக்கப்பட்டு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் உரிய ஒழுக்காற்று அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அதன் தொடர்ச்சியாகவே இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வலுவான நிலையில் எரிபொருள் கையிருப்பு

கொழும்பு, டிசெ. 01

பரிவர்த்தனை மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து பலவீனமாக இருந்த நாட்டின் எரிபொருள் கையிருப்பு தற்போது வலுவான நிலையை எட்டியுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நேற்று கூட்டுத்தாபனம் வெளியிடப்பட்ட அறிக்கையிலே இது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், “கடந்த பெப்ரவரி மாதத்தின் பின்னர் எரிபொருள் இருப்பு வலுவான நிலையை அடைந்துள்ளது. நாட்டின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய போதுமான எரிபொருள் இருப்பு காணப்படுகின்றது.

இலங்கை பெற்றோலியம் சட்டப்பூர்வ கூட்டுத்தாபனத்தின் தரவுகளின்படி, இன்றைய நிலவரப்படி, 83,236 மெற்றிக் தொன் ஒட்டோ டீசல், 9955 மெற்றிக் தொன் சுப்பர் டீசல், 20,640 மெற்றிக் தொன் ஒக்ரேன் 92 பெற்றோல் மற்றும் 18,354 மெற்றிக் தொன் ஒக்ரேன் 95 பெற்றோல் கையிருப்பில் உள்ளது.

எனினும் நெருக்கடியான காலப்பகுதியில் நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருளின் முழு அளவையும் விடுவிக்க வேண்டிய நிலை ஏற்பட்ட காரணத்தால் வலுவான எரிபொருள் இருப்புக்களை பராமரிக்கும் செயல்முறை தடைப்பட்டது.

கியூ.ஆர் முறை நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் சில கட்டுப்பாடுகளை பின்பற்றி எரிபொருள் வெளியிடப்படுவதால் எரிபொருள் விநியோக வலையமைப்பு முறையான முகாமைத்துவத்திற்கு உள்ளாகியுள்ளது.

இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் கொள்வனவுகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. எதிர்காலத்தில் கொள்வனவுகள் குறிப்பிட்ட நடவடிக்கைகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் - என்றுள்ளது. (அ)

# பொன். சுகந்தனுக்கு புலமைசுடர் விருது



யாழ்ப்பாணம், டிசெ. 01

வடமராட்சியைச் சேர்ந்த பிரபல பேச்சாளரும் பண்டிதருமான பொன். சுகந்தனுக்கு மதுரை பல்கலைக்கழகமும் அகத்தியர் தமிழ் சங்கமும் இணைந்து “புலமைச்சுடர்“ விருது வழங்கின.

கடந்த திங்கட்கிழமை நடந்த இந்த நிகழ்வில் விருதை பேராசிரியர் கு. இராஜேஸ்குமாரிடமிருந்து பொன். சுகந்தன் சார்பில் பேராசிரியர் க.பரமேஸ்வரன் பெற்றுக் கொண்டார். (ஐ)

# சுற்றுலா வலயங்களுக்கு விசேட மின் விநியோகம்

கொழும்பு, டிசெ. 01

டிசம்பர் மாதத்திற்கான இலங்கையின் சுற்றுலா வலயங்களுக்கான விசேட மின்சார விநியோகம் குறித்து மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்துள்ளார்.

இதன்படி, நாடளாவிய ரீதியில் பகலில் ஒரு மணித்தியாலமும், இரவில் ஒரு மணித்தியாலம் 20 நிமிடமும் மின்வெட்டு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி வரை தொடரும்.

தெற்கு மற்றும் எல்ல சுற்றுலா வலயங்களுக்கு டிசம்பர் முதலாம் திகதி முதல் ஒரு மணித்தியால இரவு நேர மின்வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், டிசெம்பர் 15ஆம் திகதி நுரைச்சோலை நிலக்கரி அனல்மின் நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கியை தேசிய மின்வட்டத்துடன் இணைத்துக்கொள்ளப்படவுள்ளது. இதன்மூலம் அனைத்து சுற்றுலா வலயங்களுக்கும், இரவு வேளைகளில் மின்வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

அதேநேரம், நாடளாவிய ரீதியில் இரவு நேர மின்வெட்டு ஒரு மணி நேரம் குறைக்கப்படும் என்றும் அமைச்சர் விஜேசேகர தெரிவித்தார்.

இதேவேளை, கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலங்களில் மின்வெட்டு அமுல்படுத்தப்படமாட்டாது என அவர் குறிப்பிட்டார். (அ)

## அண்ணாமலை, சவுக்கு சங்கர் வெளிப்படுத்தும்

# பிரதமர் மோடியின் பாதுகாப்பு ஏற்பாடு குளறுபடி புகார்கள்!

பரணிதரன்

இந்திய பிரதமர் நரேந்திர மோடி சில மாதங்களுக்கு முன்பு சென்னைக்கு வந்தபோது ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளில் குளறுபடிகள் இருந்ததாக சமூக செயல்பாட்டாளர் சவுக்கு சங்கரும் தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் கே. அண்ணாமலையும் அடுத்தடுத்து புகார்களை தெரிவித்திருக்கும் விவகாரம், தமிழக அரசியலில் பலரது புருவங்களையும் உயர்த்தியிருக்கிறது.

இதில் அண்ணாமலை, தமது கட்சி நிர்வாகிகளுடன் சேர்ந்து தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியை சந்தித்து இதே விவகாரத்தில் புகார் மனு ஒன்றை அளித்திருக்கிறார். அந்த மனுவில் அவர் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் அதிர்ச்சி தரும் தகவல்கள் நிறைந்தவையாக உள்ளன. அந்த மனுவில் என்ன உள்ளது?

“2022 ஜூலையில் நடந்த செஸ் ஒலிம்பியாட் போட்டியின் போது பிரதமரின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மிகப்பெரிய அளவில் குறைபாடுகள் நடந்துள்ளன. குறிப்பாக, அப்போது பயன்படுத்தப்பட்ட கையடக்க மெட்டல் டிடெக்டர்கள், டோர் பிரேம் மெட்டல் டிடெக்டர்கள், வெடிகுண்டு கண்டறியும் சாதனங்கள் பல காலாவதியானவை மற்றும் பராமரிப்பில்லாமல் நீண்ட காலம் உள்ளவை” என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

அண்ணாமலை மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை ஒலிம்பியாட் துவக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோடி மட்டுமின்றி, சர்வதேச சதுரங்க அமைப்பின் நிர்வாகிகள் மற்றும் தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலினும் கலந்து கொண்டிருந்தனர்.

அந்த மனுவில், ஏற்கெனவே தமிழ்நாட்டில் கடவுச்சீட்டு விநியோகிக்கப்பட்ட விவகாரத்தில் நடந்த முறைகேட்டில் உளவுப்பிரிவு கூடுதல் டிஜிபியின் (டேவிட்சன் தேவாசீர்வாதம்) தலையீட்டை பாரதிய ஜனதா கட்சி எடுத்துக் காட்டியதாகவும் அந்த விவகாரத்தில் அந்த அதிகாரியை தமிழ்நாடு அரசு அதற்கு நன்கு அறிந்தவர் என்ற காரணத்தால் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விட்டு விட்டதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

டேவிட்சனை பாதுகாத்து அவரை மிகவும் முக்கியமான உளவுப்பிரிவில் தொடர தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளதாகவும் பாரதிய ஜனதா கட்சியின் மனுவில் கூறப்பட்டுள்ளது.

**தொடரும் புகார்கள், யார் இலக்கு?**

இந்த விவகாரம் தொடர்பாக மாநில ஆளுநரை சந்தித்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அண்ணாமலை, “தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு நாளுக்கு நாள் சீர்குலைந்து வருகிறது. கோவையில் நடந்த தற்கொலைப்படை தாக்குதல் இதற்கு உதாரணம். முன்ன


டேவிட்சன் தேவாசீர்வாதம்


சவுக்கு சங்கர்

தாக, கள்ளக்குறிச்சி கலவரம், பிஎப்ஐ குண்டுவெடிப்பு மற்றும் மாநிலத்தில் நடந்த பல சம்பவங்கள் தமிழ்நாடு உளவுப்பிரிவின் தோல்வியை நிரூபிக்கின்றன,” என்று தெரிவித்தார்.

பிரதமரின் பாதுகாப்பில் ஏற்பட்ட குளறுபடிகளை, மத்திய அமைப்புகள் சுட்டிக்காட்டிய பின், பாதுகாப்பு உபகரணங்களை பராமரிக்க வலியுறுத்தும் சுற்றறிக்கையை உளவுப்பிரிவு கூடுதல் டிஜிபி அனுப்பியுள்ளார் என்றும் இத்தகைய நிலவர அறிக்கை துரதிருஷ்வடமாக பிரதமர் மாநிலத்துக்கு வருவதற்கு முன்பாக அனுப்பி விவரம் கேட்கப்பட்டிருக்க வேண்டிய ஒன்று என்றும் அண்ணாமலை குறிப்பிட்டார்.

இவ்வாறு பாதுகாப்பு சாதனங்களில் சமரம் செய்து கொண்டதுடன், மிக முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பை தமிழ்நாடு அரசு உதாசீனப்படுத்தி விட்டதாகவும் அண்ணாமலை தெரிவித்தார்.

பிரதமர் மற்றும் மிக முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு மட்டுமின்றி தமிழ்நாட்டில் உள்ள ஆலயங்கள், வரலாற்று தலங்கள் போன்ற முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள பெரும்பாலான பாதுகாப்பு சாதனங்களும் தரம் குறைந்தவையாக உள்ளன என்றும் அண்ணாமலை குற்றம்சாட்டியிருக்கிறார்.

எனவே, இந்த விவகாரத்தில் “பக்கசார்பற்ற“ விசாரணைக்கு நடவடிக்கை எடுக்க மாநில அரசுக்கு தமிழ்நாடு ஆளுநர் உத்தரவிட வேண்டும் என்றும் தவறு செய்தது கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட வர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அண்ணாமலை மனுவில் கேட்டுக் கொண் டுள்ளார்.

**அண்ணாமலையுடன் சவுக்கு சங்கர் கைகோர்க்கிறாரா?**

இந்த நிலையில், அண்ணாமலை சுமத்திய இதே குற்றச்சாட்டுகளை ஒரு நாள் முன்பே சமூக செயல்பாட்டாளரான சவுக்கு சங்கர் தமது இணையதளத்தி



லும் சமூக ஊடக பக்கங்களிலும் “சவுக்கு எக்ஸ்குளூசிவ்“ என்ற பெயரில் வெளியிட்டிருந்தார்.

அவரை தொடர்பு கொண்டு, “தமிழ்நாடு அரசுக்கு எதிரான தகவல்களை பதிவு செய்ய அண்ணாமலையுடன் கைகோர்த்து செயல்படுகிறீர்களா?” என்று கேட்டது. “இந்த தகவலை நான் முற்றிலுமாக மறுக்கிறேன். அரசின் குறைபாடுகளை தட்டிக் கேட்பதும் அதை வெளிப்படுத்துவதும் பல ஆண்டுகளாக நான் செய்து வரும் பணி. எனது தொடர்புகளும் எனக்கு தகவல் தருபவர்களும் ஏதோ ஒரு வகையில் இந்த “சிஸ்டத்தில்” பாதிக்கப்பட்டு இருப்பார்கள்.

தற்போதைய சம்பவத்தில் பிரதமரின் வருகையின் போது சாதனங்களில் குறைபாடு இருந்ததாக கூடுதல் டிஜிபி டேவிட்சன் ஆசிர்வாதமே கையெழுத்திட்ட சுற்றறிக்கையை அனைத்து மாவட்ட காவல் துறைக்கும் பகிர்ந்திருக்கிறார். அதை நான் தெளிவாக உறுதிப் படுத்திய பிறகே அந்த தகவலை பகிர்ந்தேன்,” என்கிறார் சங்கர்.

“உங்களுடைய எல்லா புகார்களிலும் உளவுப்பிவு கூடுதல் டிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதத்தின் பெயரை சேர்த்து குற்றச்சாட்டை பதிவு செய்கிறீர்களே?” என்று கேட்டோம்.

“பிரச்னையின் ஆணி வேராக அவர் இருக்கும்போது அவரது தவறுகளை சுட்டிக்காட்டுவது, ஊழலை இடித்துரைக்கும் சமூக செயல்பாட்டாளராக எனது கடமை,” என்று சவுக்கு சங்கர் தெரிவித்தார்.

சில மாதங்களுக்கு முன்பு சவுக்கு சங்கர், தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சி மீதான கடுமையான விமர்சகராக இருந்தார்.

ஆனால், சமீபத்தில் அவர் நீதிமன்ற அவதூறு வழக்கில் சிறைக்கு அனுப்பப்பட்டபோது, அவருக்கு சட்ட உதவி வழங்க அண்ணாமலை முன்வந்ததாகவும் அதன் பிறகு அந்த கட்சிக்கு எதிரான நிலைப்பாட்டை தாம் மாற்றிக் கொண்டதாகவும் சங்கர் யூட்யூப் சேனல் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

மேலும், திமுக இளைஞரணி தலைவரும் சேப்பாக்கம் தொகுதி எம்எல்ஏவுமான உதயநிதி ஸ்டாலின் அடுத்து வரும் தேர்தலில் எங்கு போட்டியிட்டாலும் அவரை எதிர்த்துப் போட்டியிடுவேன் என்றும் சவுக்கு



சங்கர் அந்த பேட்டியில் கூறியிருந்தார்.

**சர்ச்சைக்கு காரணம் மத்திய அரசு கடிதமா, உளவுப்பிரிவு கடிதமா?**

“பிரதமரின் பாதுகாப்பு குளறுபடி“ என்ற புகாருடன் சவுக்கு சங்கர், அண்ணாமலை, ஆகியோர் அடுத்தடுத்து புகார்களை தெரிவித்த நிலையில், அதன் பின்னணி குறித்து மத்திய, மாநில உளவுப்பிரிவு வட்டாரங்களில் ஆராய்ந்தபோது,

இது தெடர்பான விசாரணையில், அண்ணாமலை, சவுக்கு சங்கர் குறிப்பிடுவது போல மத்திய அமைப்புகள் தரப்பில் இருந்து தமிழ்நாடு காவல்துறைக்கோ, தமிழ்நாடு அரசுக்கோ எந்த கடிதத் தொடர்பும் நடந்திருக்கவில்லை எனத் தெரிய வந்தது.

அதே சமயம், சென்னை செஸ் ஒலிம்பியாட் நிகழ்வுக்குப் பிறகு தமிழ்நாடு உளவுப்பிரிவு கூடுதல் டிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம் தரப்பில் இருந்து ஒரு சுற்றறிக்கை அனைத்து மாவட்ட காவல் துறைக்கும் அனுப்பப்பட்டிருப்பதாக அறியவந்தது.

டேவிட்சன் தேவாசீர்வாதம் கையெழுத்திட்ட அந்த சுற்றறிக்கையில் ஒலிம்பியாட் பந்தோபஸ்து நட வடிக்கையின்போது பயன்படுத்தப்பட்ட பாதுகாப்பு சாதனங்களின் நிலவரம் தொடர்பான மாதாந்திர அறிக்கை திருப்திகரமாக இல்லை என்று கூறப்பட்டுள்ளதாக அறிகிறோம்.

மேலும், மாவட்ட அளவில் பாதுகாப்பு சாதனங் களின் தரத்தையும் நிலையையும் ஆராய குழு அமைக் கவும் கூடுதல் உளவுப்பிரிவு கூடுதல் தலைமை இயக்கு நர் நான்கு அம்ச யோசனைகளை பரிந்துரைத்து அவற்றை செயல்படுத்தும்படியும் உத்தரவிட்டுள்ள தாகவும் தெரிய வந்துள்ளது.

**சாதனங்களில் கோளாறு இருந்ததா?**

இந்த தகவல்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட கூடுதல் டிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதத்தை தொடர்பு கொண்டு கேட்டோம்.

“சென்னை செஸ் ஒலிம்பியாட் நடந்தது ஜூலை மாதம். இந்த சுற்றறிக்கையை நான் அனுப்பியது அக்டோபர் மாதம். ஆனால், அதில் சாதனங்கள் பழுதடைந்ததாகவோ பயன்பாடற்று இருந்ததாகவோ குறிப்பிடவில்லை. சாதனங்களின் செயல்திறனை உறுதிப்படுத்த வேண்டியது எனது கடமை. அதை உறுதிப்படுத்த சில வழிமுறைகள் அடங்கிய குறிப்புகளை சுற்றறிக்கையாக அனைத்து மண்டல ஐஜிக்கள், ஆணையர்களுக்கு அனுப்பினேன். இது வழக்கமான நடவடிக்கைதான். இதை வைத்து பிரதமரின் பாதுகாப்பில் குளறுபடி நடந்ததாக தகவல்கள் வெளியிடப்படுகின்றன,” என்று தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து தமிழக உளவுப்பிரிவில் மூத்த அதிகாரியொருவரிடம் பேசுகையில்,“சென்னை ஒலிம்பியாட் நிகழ்வில் பாதுகாப்பில் சமரசம் செய்து கொண்டதாக கூறுவதில் உண்மையில்லை. அந்த நிகழ்ச்சியில் பிரதமர் மட்டுமின்றி முதல்வரும் பங்கேற்றுள்ளார். அத்தகைய பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை அலட்சியமாக கருத வாய்ப்பில்லை. மத்திய பாதுகாப்பு அமைப்புகள் பழுதடைந்த சாதனங்களை பயன்படுத்தியதாக கூறியிருந்தால், அதை சமீபத்தில் திண்டுக்கல் நிகழ்வுக்கு பிரதமர் வருவதற்கு முன்பாக நடந்த பாதுகாப்பு முன்னேற்பாடு கூட்டுக்கூட்டத்தில் அவரது பாதுகாப்புக்கு பொறுப்பு வகிக்கும் சிறப்புப் பாதுகாப்புப்படை அதிகாரிகள் எழுப்பியிருப்பார்கள். ஆனால், அப்படி எதுவும் எழுத்துபூர்வமாகவோ வாய்மொழியாகவோ பதிவாகவில்லை,” என்று கூறினார்.

இதேவேளை தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியிடம் அளிக்கப்பட்ட மனு மீதான நடவடிக்கை குறித்து அவரது தரப்பிடம் கேட்டபோது, அந்த மனு முறைப்படி தமிழ்நாடு காவல்துறையின் கருத்துக் கேட்புக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (பிபிசி)

# தமிழ் கட்சிகள் இந்திய மத்தியஸ்தத்தை கோரவேண்டும்?



யதீந்திரா

இந்தியாவின் முக்கியத்துவம் தொடர்பில் இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்பங்களில் எழுதியிருககின்றேன். முள்ளிவாய்க்கால் அவலம் நமது அரசியல் புரிதல் மற்றும் அணுகுமுறைகள் தொடர்பில் பலவாறான கேள்விகளை எழுப்பியிருந்தது. இந்த பினபுலத்தில் 'இந்தியா புலிகளை அழித்ததா' என்னும் தலைப்பில், தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் காலச்சுவடு சஞ்சிகையில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தேன். அந்தக் கட்டுரையில் பல அரசியல் நண்பர்கள் திருப்தியடையவில்லை. பலர் எனது நட்பையும் துண்டித்துக் கொண்டனர். இன்று காலம் 13 வருடங்களாக நகர்ந்து விட்டது. இப்போது பலரும் புதுடில்லியுடன் எவ்வாறு நெருங்குவதென்று உரையாடிவருகின்றனர். ஒரு காலத்தில் இனிப்பாக நோக்கப்பட்ட இந்தியா என்னும் சொல், பின்னர் கசப்பானது. விடுதலைப் புலிகள் அமைப்பு, இந்திய படைகளுடன் மோதிய பின்னணியில்தான், அது கசப்பானது. அன்றைய சூழலில், இந்தியாவுடன் இணைந்துதான் பயணிக்க வேண்டுமென்று கூறியவர்கள் (துரோகிகளாக்கப்பட்டு) தூற்றப்பட்டனர். ஆனால் காலம் அனைத்தையும் செல்லாக்காசாக்கிவிட்டது. காலம் வலியதென்பார்கள். காலம் நமக்கு தரும் அனுபவங்களை எந்தவொரு ஏட்டறிவும் தந்துவிடப்போவதில்லை.

நான் இப்போது, இந்தியா தொடர்பில் பேசுவதற்கு ஒரு வலுவான காரணமுண்டு. அதாவது, ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு தொடர்பில் பேசிவருகின்றார். தமிழ் கட்சிகள் அனைத்தும் இணைந்து வந்தால் தான் பேசுவதற்கு தாயராக இருப்பதாகவும் கூறுகின்றார். தமிழ் கட்சிகளின் தலைவர்கள் வழமைபோல் சமஸ்டியை உச்சரித்துக் கொண்டிருக்கின்றனர். தமிழ் கட்சிகள் இவ்வாறுதான் பேசுமென்பதும் ரணில் அறியாத ஒன்றல்ல. ஏனெனில் தற்போதுள்ள தென்னிலங்கை அரசியல்வாதிகளில் ரணில் விக்கிரமசிங்க அளவிற்கு தமிழர்களின் பிரச்சினையை வேறு எவரும் அறியார். இந்திய-இலங்கை ஒப்பந்த காலத்திலிருந்து, ஒஸ்லோ பேச்சுவார்த்தை வரையில் பயணம் செய்தவர் ரணில். எனவே ரணில் விக்கிரமசிங்க புதிதாக தெரிந்துகொள்வதற்கு எதுவுமில்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான் தமிழ் கட்சிகளை பேச வருமாறு அவர் அழைக்கின்றார்.

தமிழர் அரசியல் வரலாற்றில் ஒரு எளிய உண்மையுண்டு. அதாவது, தமிழர்களும் சிங்களவர்களும் உரையாடி பிரச்சினையை தீர்க்க முடியுமென்றால், தேசிய இனப்பிரச்சினையன்பது, ஒரு பழம் கதையாகியிருக்கும். அரசியல் தீர்வென்பது எப்போதோ முடிந்த காரியமாகியிருக்கும். கடந்த எழுபது வருடங்களுக்கும் மேலாக, தீர்க்க முடியாமல் இழுபட்டுக் கொண்டிருக்கும் பிரச்சினைக்கான தீர்வை, தான் அடுத்த ஆண்டுக்குள் காணப்போவதாக ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். இது தொடர்பில் எந்தவொரு கேள்வியுமில்லாமல் சமஸ்டியடிப்படையில் பேசுவோமென்று தமிழ்தேசிய கட்சிகளின் தலைவர்கள் கூறுகின்றனர். செல்வநாயகம் காலம் தொடக்கம், பிரபாகரன் காலம் வரையில், பல பேச்சுவார்த்தைகளை நாம் கண்டிருக்கின்றோம். இந்த பேச்சுவார்த்தைகளில் ஒரு பிரதான அம்சமுண்டு, அதாவது, சிங்களவர்களும் தமிழர்களும் பேசி பிரச்சினைகளை தீர்க்க முற்பட்ட அனைத்து சந்தர்பங்களும் தோல்வியடைந்திருக்கின்றது.

இந்த இடத்தில்தான் மூன்றாம் தரப்பின் தேவை உணரப்பட்டது. தமிழர் பிரச்சினையில் மூன்றாம் தரப்பினர் தலையீடு செய்த இரண்டு சந்தர்பங்களுண்டு. இதனை இரண்டு காலகட்டங்களாக பிரிக்கலாம். ஒன்று, இந்திய தலையீட்டு காலம். இரண்டு, நோர்வேயின் மத்தியஸ்த காலம். முதலாவது பிராந்தியரீதியான தலையீடாகும். இரண்டாவது மேற்குலக தலையீடாகும். ஏனெனில், நோர்வேயென்பது மேற்குலக சமாதான முன்னெடுப்புக்களுக்கான முகவர் முகமாகும். இந்த இரண்டு தலையீடுகளுக்கும் ஒரு ஒத்த இயல்புண்டு. இரண்டு தலையீடுகளுமே, தமிழர்கள் ஆயுதரீதியான பலத்துடன் இருந்த காலத்தில் இடம்பெற்ற தலையீடுகளாகும்.

அதே வேளை, ஒரு அடிப்படையான வேறுபாடுமுண்டு. அதாவது, இந்தியா முதலில் தமிழ் இயக்கங்களை ஆயுதரீதியில் பலப்படுத்தி, அதன் பின்னரே நேரடியாக தலையீடு செய்தது. ஆனால் மேற்குலகோ, ஒரு எல்லைவரைக்கும் விடுதலைப்புலிகளை, இயங்குவதற்கு அனுமதித்துவிட்டு, அதன் பின்னரே தலையீடு செய்தது. அதாவது, விடுதலைப்புலிகள் இலங்கையின் இராணுவத்திற்கு சவால்விடுக்கக் கூடிய நிலையிலிருந்த காலத்தில்தான், நோர்வேயின் தலையீடு நிகழ்ந்தது. இதில் பிறிதொரு விடயமுண்டு. அதாவது, ராஜீவ்காந்தியின் கொலைக்கு பின்னர், விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவில் தடைசெய்யப்பட்டது. ஆனால் மேற்குலகத்தில் தடைசெய்யப்படவில்லை. 1990களுக்கு பின்னர், விடுதலைப் புலிகள் அமைப்பு ஐரோப்பிய ஜனநாயக சூழலை பயன்படுத்தியே தங்களை வளர்த்துக் கொண்டது. ஆரம்பத்தில் தமிழ் நாடுதான், விடுதலைப் புலிகளுக்கான பின்தளமாக இருந்தது. பின்னர், அது ஐரோப்பாவாக மாறியது. இந்த பின்புலத்தில் நோக்கினால், 90களுக்கு பின்னரான விடுதலைப் புலிகளின் வளர்ச்சிக்கு மேற்குலகத்தின் நெகிழ்வான அணுகுமுறையே பிரதான காரணமாகும். 1997இல், அமெரிக்கா விடுதலைப் புலிகள் இயக்கத்தை சர்வதேச பயங்கரவாத அமைப்பாக தடைசெய்த போதிலும் கூட, 2006இல்தான், ஐரோப்பிய ஒன்றியம் புலிகளை தடைசெய்தது. கனடாவும் 2006இல்தான் தடைசெய்தது. அமெரிக்காவில் புலிகள் தடைசெய்யப்பட்ட போதிலும் கூட, அமெரிக்காவின் வெளிவிவகார கொள்கையின் கடைக்கண் பார்வைக்குள் இருக்கும் கனடாவில், விடுதலைப் புலிகள் தடைசெய்யப்படவில்லை. அமெரிக்கா எண்ணியிருந்தால், கனடாவிலும் விடுதலைப் புலிகளை ஆரம்பத்திலேயே தடைசெய்திருக்க முடியும்.

இந்த பின்னணியில் நோக்கினால், மேற்குலகம் விடுதலைப் புலிகளின் வளர்ச்சியை தடுக்க முயற்சிக்கவில்லை. மாறாக, ஒரு எல்லைவரையில் வளர்வதற்கு அனுமதித்திருந்தது. இதற்கு பிறிதொரு காரணமும் உண்டு. அதாவது, விடுதலைப் புலிகள் இயக்கம் கருத்தியல்ரீதியில் மேற்குலகிற்கு எதிரான நிலைப்பாடுடையதல்ல. ஒரு வேளை விடுதலைப் புலிகள் அமைப்பானது, ஒரு இடதுசாரி இயக்கமாக தன்னை முன்னிறுத்தியிருந்தால், மேற்குலகம் விடுதலைப் புலிகளுக்கு இவ்வாறான சலுகையை வழங்கியிருக்காது. இந்த பின்புலத்தில் நோக்கினால், தங்களுடைய நெகிழ்வான அணுகுமுறைகளால் வளர்சியடைந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தை, ஜனநாயக நீரோட்டத்திற்குள் கொண்டுவருவதற்கானதொரு முயற்சியாகவே நோர்வேயின் தலையீட்டை நாம் நோக்க வேண்டும். அப்படி நோக்குவதுதான் சரியாகவும் அமையும். அதே வேளை இந்திய தலையீட்டிற்கும் நோர்வேயின் முகவர் தலையீட்டிற்கும் இடையில் ஒரு கொள்கைசார்ந்த உடன்பாடுண்டு. அதாவது, இரண்டு தலையீடுகளுமே தமிழ் மக்களுக்கான தனிநாட்டை ஆதரிக்கும், அங்கீகரிக்கும் நிலைப்பாட்டை கொண்டிருக்கவில்லை. மாறாக அதற்கு மாற்றான அரசியல் தீர்வொன்றை காண்பதற்கான தலையீடாகவே இருந்தது. பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததை தொடர்ந்து, நோர்வேயின் பெறுமதி இல்லாமல் போய்விட்டது. இப்போது ரணில்-பிரபா உடன்பாடு ஒரு விடயமல்ல. ஏனெனில் பிரபாகரனும் விடுதலைப் புலிகள் அமைப்பும் இல்லை. ஆனால் இந்திய-இலங்கை ஒப்பந்தம் இப்போதும் எப்போதும் விடயமாகவே இருக்கும். ஏன்? ஏனெனில், அது இரண்டு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான், இந்தியா தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் வலியுறுத்திவருகின்றது. அதே வேளை, தமிழர்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பேசிவரும் ஒரேயொரு நாடும் இந்தியா மட்டும்தான்.

எனவே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பேசப்படும் ஒவ்வொரு சந்தர்பங்களிலும் இந்தியாவின் தலையீடு தவிர்க்க முடியாதது. தவிர்க்கவும் கூடாது. ஆனால் இந்த விடயத்தை சரியாக புரிந்துகொண்டு தமிழ் தேசிய கட்சிகள் செயற்படவில்லை. ரணில்-மைத்திரி ஆட்சிக்காலத்தில், சம்பந்தன் - சுமந்திரன் தரப்பு, திட்டமிட்டே இந்தியாவை தவிர்த்துக்கொண்டது. இதற்கு சொல்லப்பட்ட காரணம், இந்தியாவிடம் சென்றால் சிங்களவர்கள் கோபிப்பார்கள். இதன் காரணமாகவே, சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சந்தர்பத்தில், ஒரு முறை கூட, புதுடில்லிக்கு பயணம் செய்யவில்லை. இறுதியில் அரசியல்யாப்பு முயற்சிகள் படுதோல்வியடைந்தன. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்தியாவின் மேற்பார்வையில் விடயங்களை கையாண்டிருந்தால், இருக்கும் நிலையிலிருந்து முன்னோக்கி சென்றிருக்கலாம். முன்னர் செய்த அதே தவறையே இப்போதும் தமிழ் தேசிய கட்சிகள் என்போர் செய்கின்றனர். இங்கு கருத்தூன்றி கவனிக்க வேண்டிய விடயமொன்றுண்டு. அதாவது, சமஸ்டியடிப்படையில் பேசுவதானால் இந்தியாவின் தலையீடு நிகழாது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலிருந்து முன்னோக்கி பயணிப்பதாயின், இந்தியாவினால் தலையீடு செய்ய முடியும். இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி.ஜெயசங்கர், கூட்டமைப்புடனான சந்திப்பின் போது, முன்னர் ஒரு முறை இதனை கூறியுமிருக்கின்றார்.

ஏன் மூன்றாம் தரப்பொன்றின் தலையீடு கட்டாயமானது. இந்தக் கட்டுரை மூன்றாம்தரப்பு என்பதால் இந்தியாவை மட்டுமே குறிப்பிடுகின்றது. இந்தியாவல்லாத எந்தவொரு நாட்டின் தலையீடும் தமிழர் விடயத்தில் சாதகமான பங்களிப்பை வழங்க முடியாது. பங்களிப்பு என்பதற்கும் சாதகமான பங்களிப்பு என்பதற்குமான வேறுபாடு கனதியானது. முன்னர் இடம்பெற்ற மூன்றாம் தரப்பின் தலையீட்டிற்கும் இப்போது இந்தக் கட்டுரையாளர் குறிப்பிடும் இந்திய தலையீட்டிற்கும் அடிப்படையான வேறுபாடுண்டு.


இந்த கட்டுரையில் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, முன்னர் இடம்பெற்ற இரண்டு தலையீடுகளும் தமிழர்கள் ஆயுத பலத்துடனிருந்த காலத்தில் இடம்பெற்ற தலையீடுகளாகும். அந்தத் தலையீடுகளின் போது, தமிழர்களுக்கு வலுவான குரலிருந்தது. தமிழர்களால் விடயங்களை அழுத்தி வலியுறுத்த முடிந்தது. ஆனால் இப்போதைய நிலைமை தலைகீழானது. தமிழர்கள் முற்றிலும் பலமற்றவர்களாக இருக்கும் சூழலில்தான் கொழும்புடன் பேசவேண்டியிருக்கின்றது. இந்தப் பேச்சுவார்த்தையில் சிங்கள தரப்பே எப்போதும் பலமாக இருக்கும். தமிழர்கள் விடயங்கள் கூறினாலும் அதனை செய்யவேண்டுமென்னும் நிர்பந்தம் அவர்களுக்கில்லை. அப்படியிருப்பதாக சிலர் கூறலாம். ஆனால் உண்மையான நிலைமை அப்படியல்ல. தமிழர் பிரச்சினைக்கான தீர்வை கண்டால்தான், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உதவுவோமென்று எந்தவொரு நாடும் நிபந்தனைகளை முன்வைக்கவில்லை. அப்படி அவர்கள் கூறப்போவதுமில்லை. இராணுவத்தை குறைக்குமாறு நாடுகள் நிபந்தனைகளை முன்வைத்ததாக நம்மில் சிலர் கூறிக்கொண்டிருக்கும் போதுதான், பொருளாதார நெருக்கடிக் காலத்தில் கூட, பாதுகாப்பிற்கு அதிக நிதியொதுக்கப்பட்டிருக்கின்றது. எனவே அரசுகளுக்கிடையிலான உறவுகளை மிகவும் எளிமையாக விளங்கிக்கொள்வது தவறானது.

பேச்சுவார்த்தைகளின் போது, ஒரு தரப்பு மிகவும் பலவீனமாக இருந்தால், ஒரு மூன்றாம்தரப்பிடமிருந்து அதிகாரத்தை கடன்பெறும் அணுகுமுறையுண்டு. இது ஒரு முரண்பாட்டு தீர்விற்கான அணுமுறையாக சொல்லப்படுகின்றது. இந்த கோட்பாட்டின் அடிப்படையில் கூறுவதானாலும் கூட, பலவீனமான நிலையிலிருக்கும் தமிழர்கள், ஒரு மூன்றாம்தரப்பின் மேற்பார்வையின்றி, விடயங்களை அணுகுவது புத்திசாலித்தனமல்ல. இந்த சந்தர்பத்தில், தமிழ்கட்சிகளின் தலைவர்கள் இந்தியாவின் மத்தியஸ்தத்தை ஒருமித்து கோரவேண்டும். ஏற்கனவே இந்திய பிரதமரின் தலையீட்டை கோரி, கடிதம் அனுப்பியிருக்கும் கட்சிகள், இந்தவிடயத்தில் தடுமாற வேண்டியதில்லை. அந்தக் கடிதத்தில் கோரியது உண்மையாயின், இப்போது குறித்த ஆறு கட்சிகளும் கருத்தொருமித்து, இந்தியாவின் மத்தியஸ்தத்திற்கான அழைப்பை முன்வைக்க வேண்டும். ஆனால் மத்தியஸ்தத்தின் அடிப்படையாக இந்திய-இலங்கை ஒப்பந்தமே இருக்க வேண்டும். முன்னர் சம்பந்தன் - சுமந்திரன் செய்த தவறையே மீளவும் செய்தால், செய்ய அனுமதித்தால், மீளவும் சமஸ்டியுமில்லை, தீர்வுமில்லையென்னும் நிலைமையே ஏற்படும். அப்படியொரு நிலைமைதான் தொடர்ந்தும் ஏற்பட வேண்டுமென்று, தமிழ் கட்சிகளின் தலைவர்கள் விரும்பினால், செல்வநாயகம் கூறியது போன்று தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். தமிழர்கள் என்பதால், ஏழை மக்கள் தொடர்பிலேயே இந்தக் கட்டுரை குறிப்பிடுகின்றது. கட்சிகளின் தலைவர்களுக்கு எந்த பிரச்சினையுமில்லை ஏனெனில், அவர்களிடம் கோடிகள் உண்டு.

●

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

.........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , .............. , ............ ii) 18 , 15 , 12 , .............. , ............

**21)**

| | | |
|---|---|---|
| 3, | 9, | 14, |
| 10, | 6, | 12, |

பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.......................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.........................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

.................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

.................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ...................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.......................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

..................................................... (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)  2)  3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6 2) 8 **19.** $\frac{3}{10}$

**20.** 1) 128, 130 2) 9, 6

**21.** 3, 6, 9, 12

**22.** 745 **23.** 455

**24.** 1l 100ml / 1100ml **25.** ரூபாய் 144.00

**26.** 1) 190 2) 100 3) 290

**27.** 15 : 30 **28.** 5m 50cm / 550cm

**29.** 36 பூக்கள்

**30.** 1 **31.** 2 **32.** 3

**33.** 2 **34.** 3 **35.** 2

## கல்வி tv CHANNEL-1

**01.12.2022 வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**01.12.2022 வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |




# கிழக்கு மாகாணத்துக்கென ஆன்மீக செயற்றிட்ட உதவி

மட்டக்களப்பு,டிசெ. 01

வடமராட்சி செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் கிழக்கு மாகாணத்திற்கு ஆன் மீகச் செயற்றிட்ட உதவிகள் வழங்கப்பட்டன

அம்பாறை மாவட்டம் - பொத்துவில் பிரதேச செங் காமம் கிராமத்தில் அமைந் துள்ள விநாயகர் ஆலயத்தின் கட்டிட பணிக்காக 3ம் கட்டமாக 50000 ரூபா நிதி ஆலய நிர்வாக சபையினரிடம் கையளிக்கப்பட்டதுடன் பொத்துவில் பிரதேச றொட்டைக் கிராமத்தில் அமைந்துள்ள வீரையடி பிள் ளையார் ஆலய நிர்வாக சபையினரிடம் பிள்ளையார் விக்கிரகம் கையளிக்கப்பட் டது.

இவ் செயற்றிட்ட உதவி களை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன தாஸ் சுவாமிகள் அவர்கள் நேரடியாகச் சென்று வழங்கி னார். இவ் உதவித்திட்ட நிகழ்வுகளில் ஆச்சிரம தொண் டர்களும் கலந்து கொண்ட னர். (அ-02)

# விபத்தில் தங்கை மரணம்! அக்கா படுகாயம்!! திருகோணமலையில் நேற்று காலை துயரம்

திருமலை, டிசெ. 01

திருகோணமலை, புல் மோட்டை பிரதான வீதி கும்பு றுப்பிட்டி பகுதியில் நேற்று காலை இடம் பெற்ற விபத்தில் தாதியரொருவர் பலியாகியுள் ளார். மேலும் ஒருவர் காயம டைந்துள்ளார்.

நிலாவெளி பகுதியைச் சேர்ந்த குச்சவெளி வைத்திய சாலையில் கடமையாற்றி வரும் கீதாஞ்சனா தேவி (வயது-44) என்பவரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளும், பவுசரும் மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் தாதி உத்தியோகத்தரும், ஆசிரியையும் கடமைக்காக சென்று கொண்டிருந்தபோதே விபத்து இடம்பெற்றுள்ளது.

தாதியுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த அவரது அக்காவான ஆசிரியை படு காயமடைந்துள்ளார்.

குறித்த ஆசிரியை குச்சவெளி பிரதேச வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டதையடுத்து மேலதிக சிகிச்சைக்காக திரு கோணமலை பொது வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை குச்சவெளி பொலிசார் மேற்கொண்டு வரு கின்றனர். (அ)

## பாடசாலை மாணவர்களை கடத்த முயற்சி;

# அடையாள அணிவகுப்பில் வசமாக மாட்டினார் ஒருவர்

அம்பாறை, டிசெ. 01

பாடசாலை மாணவர்களை கடத்த முயற் சித்த குற்றச்சாட்டில் அடையாளம் காணப் பட்ட சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்கு மாறு கல்முனை நீதவான் உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரபல பாடசாலை மாணவர்களான 11 வயது மதிக்கத்தக்க இரு வரை இரு வேறு சந்தரப்பங்களில் முகமூடி அணிந்த மர்ம நபர்கள் கடத்த முயற்சிப்பதாக பொலிஸ் நிலையத்தில் இம்மாதம் முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இதனை அடுத்து சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரி சோதகர் எஸ்.எல்.சம்சுதீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்த அதிரடி நட வடிக்கையின் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் குறித்த கடத்தல் சம்பவம் இடம் பெற்ற பகுதிகளில் உள்ள சிசிடிவி கமராக்களின் உதவிகள் மற்றும் புலன் விசாரணை முடுக்கி விடப்பட்ட நிலையில் மாணவர்களை கடத்த முயற்சித்த சந்தேக நபர் கைதாகியுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபர் கல்முனை பகுதியை சேர்ந்த 27 வயதுடையவராவார். இச்சம்பவமானது தலைக்கவசம் மற்றும் முகக்கவசம் ஆகியவற்றுடன் முகங்களை மூடியவாறு மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேக நபர்கள் மாணவர்கள் சிலரை இலக்கு வைத இவ்வாறான கடத்த முயற்சியில் ஈடுபட் டனர் என தெரிவிக்கப்பட்டு கடந்த வாரம் பல முறைப்பாடுகள் பதிவுசெய்யட்டிருந்ததுடன் சாய்ந்தமருது பொலிஸாரும் விசாரணையினை முடக்கி விட்டிருந்தனர்.

இதற்கமைய பொலிஸாரினால் முன்னெடுக் கப்பட்ட இவ்விசாரணையின்போது பாடசாலை மாணவர்களை கடத்த முயற்சித்த சம்பவத்து டன் தொடர்பு பட்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன் கடநண்ட்ந்த்செவ்வாய்க் கிழமை கல்முனை நீதவான் முன்னிலையில் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட் டார்.

இவ்வடையாள அணிவகுப்பின் போது அச்சந்தேக நபரை பாதிக்கப்பட்ட மாணவன் அடையாளப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து குறித்த சந்தேகநபரை எதிர்வரும் டிசம்பர் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ)

# மாவட்ட அபிவிருத்திச் சபை தெற்குக்கு தேவையெனில் வைத்துக்கொள்ளுங்கள்!

## சபையில் சாடினார் ஜனா எம்.பி.



நிந்தவூர், டிசெ. 01

தெற்குக்குத் தேவையென் றால் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை வைத்துக் கொள் ளுங்கள். நிரந்தரமாக புரை யோடிப்போயுள்ள இனப்பிரச் னைக்கு நிரந்தரத் தீர்வை நீங்க ள் கொடுக்க வேண்டுமென் றால் இணைந்த வடகிழக்கில் முழு அதிகாரங்களையும் பரவ லாக்கி ஒரு சமஷ்டி அடிப் படையிலான ஒரு தீர்வைக் கொடுத்தால்தான் இந்த நாடு எதிர்காலத்தில் ஒரு சுபீட்ச மான நாடாக இருக்கும் என்று தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தின் செயலாளர் நாயகமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பின ருமான கோவிந்தன் கருணா கரம் (ஜனா) தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடை பெற்ற சுகாதார அமைச்சு, புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் முன் னாள் ஜனாதிபதியும் தற்போ தைய பாராளுமன்ற உறுப்பின ருமான மைத்திரிபால சிறி சேனவும் தற்போதைய ஜனாதி பதியும் தெரிவித்த மாவட்ட அபிவிருத்திச் சபை குறித்த கருத்து தொடர்பில் உரையாற் றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் -

இன்று காலையில் முன் னாள் ஜனாதிபதியும், தற் போதைய ஜனாதிபதியும் இந்த சபையில் ஒட்டு மொத்த நாட்டு மக்களையும், குறிப் பாக தமிழ் மக்களையும் வேத னைப்படுத்தும் ஒரு கருத்தைப் பரிமாறிக் கொண்டார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மூலம் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்று கூறியிருந் தார். தற்போதைய ஜனாதிபதி கடந்த சில அமர்வுகளுக்கு முன்பு அனைவரையுமே இந்த சபையில் எழுப்பி இனப்பிரச்சி னைக்கான ஒரு நிரந்தரத் தீர் வைக் காண்பதற்கு நீங்கள் எல் லாம் தயாரா என்று கேட்டது மாத்திரமல்லாமல், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களை எழுந்து 13 பிளஸ் என்று கூறுங்கள் என்று கூறிய ஜனாதிபதி மாவட்ட சபை களைப் பற்றி பிரஸ்தாபித்தி ருப்பது மிகவும் வேதனையான விடயம்.

மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தல் என்றாலே எங்க ளுக்கு ஞாபகம் வருவது யாழ்ப்பாண நூலகத்தை எரித்த சம்பவம் தான். அந்த மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலையும் அந்த அதிகாரப் பரவலாக்கத்தையும் என்றோ இந்த நாட்டு மக்கள் நிரா கரித்து விட்டார்கள்.

உங்களுக்குத் தேவையென் றால், தெற்குக்குத் தேவை யென்றால் மாவட்ட அபிவி ருத்திச் சபைகளை வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் நிரந்தரமாக புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சி னைக்கு நிரந்தரத் தீர்வை நீங்கள் கொடுக்க வேண்டு மென்றால் இணைந்த வட கிழக்கில் முழு அதிகாரங்களை யும் பரவலாக்கி ஒரு சமஸ்டி அடிப்படையிலான ஒரு தீர் வைக் கொடுத்தால்தான் இந்த நாடு எதிர்காலத்தில் ஒரு சுபீட்சமான நாடாக இருக்கு மென்பதை மீண்டும் நான் வலியுறுத்துகிறேன் - என்றார். (அ-06)

# காரைதீவில் செவ்வாயன்று டெங்கு களப் பரிசோதனை



அம்பாறை, டிசெ. 01

காரைதீவு சுகாதார வைத் திய அதிகாரி வைத்தியர் தஸ் ஸீமா வசீர் தலைமையில் காரைதீவு 12 மற்றும் மாளி கைக்காடு பிரதேசத்தில் விசேட டெங்கு கள பரி சோதனை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற் றது.

நேற்றுமுன்தினம் மட்டும் 469 வீடுகள் பரிசோதனை செய்யப்பட்டன.

டெங்கு நுளம்பு பெருகக் கூடிய இடங்களை வைத்திருந்த 16 வீடுகளுக்கு சிவப்பு அறிவித் தல்களும் வழங்கப்பட்டுள்ளது.

இப் பரிசோதனையில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோ கத்தர்கள், மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர் கள் மற்றும் நுளம்பு கள தடுப் புப் பிரிவினர்கள், காரை தீவு பிரதேச செயலக உத்தி யோகத் தர்கள், பொலிஸ் உத்தியோகத் தர்களும்,பொதுமக்களும் இணைந்து டெங்கு தள தடுப்பு பரிசோதனையில் கலந்து கொண்டார்கள். (அ)

# 48,500 ஆண்டுகளுக்கு பின் மீண்டும் புத்துயிர் பெற்றது சோம்பி வைரஸ்!

மொஸ்கோ, டிசெ.01

ரஷ்யாவில் இதுவரை உறைந்த ஏரியின் அடியில் புதைந்திருந்த 48,500 ஆண்டுகள் பழமையான சோம்பி வைரஸை பிரான்ஸ் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். “சோம்பி வைரஸ்’ மூலம் மேலும் ஒரு தொற்று நோய் குறித்த அச்சத்தை ஆய்வாளர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

“பழங்கால அறியப்படாத வைர ஸின் புத்துயிரால் தாவரங்கள், விலங்கு கள் அல்லது மனித நோய்களின் விட யத்தில் நிலைமை மிகவும் பேரழிவு தரும்” என்று வைரஸ் ஆய்வு கூறு கிறது.

ஆய்வு அறிக்கையின்படி, புவி வெப்பமடைதல், பருவநிலை மாற்றும் காரணமாக பல ஆயிரம் ஆண்டுகளாக நிரந்தரமாக உறைந்திருந்த இந்த ஏரி உருகியுள்ள நிலையில், இதில் புதிய வைரஸ்கள் கண்டறியப்பட்டுள்ளன. பருவநிலை மாற்றத்தால் பனிக்கட்டிகள் வேகமாக உருகும் விதம், இதுபோன்ற சூழ்நிலையில் திடீரென வைரஸ் தொற்று பரவினால், ஆபத்து அதிகம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆய்வாளர்கள் ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள சைபீரியா பகுதியில் உள்ள பெர்மாஃப்ரோஸ்டிலி ருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளை பிரான்ஸ் ஆய்வாளர்கள் ஆய்வு செய்த னர். அதில் 13 வகை வைரஸ்களுக்கு புத்துயிர் அளித்துள்ளனர். அதில் ஒரு



வைரஸ் சுமார் 48,500 ஆண்டுகளாகப் புதைந்திருந்த ‘சோம்பி வைரஸ்கள்’ என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ள னர். அவை அனைத்தும் ஐந்து வெவ் வேறு இனங்களைச் சேர்ந்தவை எனவும் அவைகளின் பெயர் மெகா வைரஸ் மம்மத் எனவும், இந்த வைரஸ்கள் யானைகளின் மூதாதையர்களான மாமூத்கள் சைபீரியாவில் சுற்றித் திரிந்த காலத்தைச் சேர்ந்தவை எனவும் பனி காலத்தில் பல வைரஸ்கள் சைபீரியா வின் பெர்மாஃப்ரோஸ்ட் பனியில் புதைக்கப்பட்டுள்ளன. இந்த வைரஸ் கள் “ஒரு மில்லியன் ஆண்டுகள் வரை உறைந்திருக்கும் கரிமப் பொருட்களை வெளியிடுவதன்” அமைதியற்ற விளை வைக் கொண்டுள்ளது - ஒருவேளை இதில் கொடிய கிருமிகளும் இருக்கலாம்.

“இந்த கரிமப் பொருளின் ஒரு பகுதி யாக புத்துயிர் பெற்ற செல்லுலார் நுண் ணுயிரிகள் (புரோகாரி யோட்டுகள், யூனி செல்லுலர் யூகாரி யோட்டுகள்) மற்றும் வரலாற்றுக்கு முந் தைய காலத்திலி ருந்து செயலற்ற நிலையில் இருக்கும் வைரஸ்கள் உள்ளன” என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அதில் சிலவற்றை விஞ்ஞானிகள் வெளியே எடுத்து உயிர்ப்பித்து ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

இவை பல ஆயிரம் ஆண்டுகளாக உறைந்த நிலையில், இருந்த போதிலும், அது இன்னும் கூட மனிதர்களைத் தாக்கும் குணத்தைக் கொண்டிருந்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பருவநிலை மாற்றத்தால் பனிக்கட்டி கள் வேகமாக உருகும் விதம், இது போன்ற சூழ்நிலையில் திடீரென வைரஸ் தொற்று பரவினால், ஆபத்து அதிகம் என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

அதனால்தான் ரஷ்யா, ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இந்த வைரஸ் களை முன்கூட்டியே கண்டுபிடித்து ஆய்வு செய்ய விரும்புவதாகவும் இதன் மூலம் அவற்றின் தொற்றுநோயைத் தவிர்ப்பதற்கான வழியைக் கண்டறிய முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், இவை பெரும்பாலும் அமீபா நுண்ணுயிரிகளை பாதிக்கும் திறன் கொண்டவையே. இவை மனிதர்களை தாக்கும் ஆபத்து மிகவும் குறைவு எனவும், எதிர்காலத்தில் கொரோனா நோய்த்தொற்று போன்று பொதுவானதாக மாறுவதற்கு வாய்ப்புள்ளதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

பனிப்பாறைகள் உருகுபோது இதுபோன்ற பழமையான வைரஸ்கள் வெளிப்பட்டாலும் வெளிப்புற சூழலில் எவ்வளவு காலம் தொற்றாக இருக்கும் என்பதும், தனக்கு பொருத்தமான ஒரு உயிர் மீது எப்படி இது தாக்கும் என் பது மதிப்பிடுவது சாத்தியம் இல்லை.

இருந்தாலும் புவி வெப்பமயமாதல் போன்ற காரணிகளால் தொடர்ந்து பனிப்பாறைகள் உருகும் நிலையிலும் ஆர்டிக் பகுதியில் அதிக மக்கள் குடி யேறுவதும் ஆபத்துக்கு வாய்ப்புகள் அதிகம் என்று ஆய்வாளர்கள் கூறு கின்றனர்.

ஒளி, வெப்பம், ஒக்ஸிஜன் மற்றும் பிற வெளிப்புற சுற்றுச்சூழல் மாறிகள் வெளிப்படும் போது இந்த அறியப் படாத வைரஸ்களின் தொற்று அளவை மதிப்பிடுவதற்கு கூடுதல் ஆராய்ச்சி தேவை என்று ஆய்வாளர்கள் கூறுகின்ற னர். (அ)

# சீனாவில் கொரோனா தீவிரம்!

## போராட்டங்களை கைவிட்ட பொதுமக்கள்



பீஜிங், டிசெ.01

சீனாவில் கடந்த சில வாரங்களாக கொரோனா தொற்று எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. தினசரி கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 40 ஆயிரத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக அங்கு கொரோனா கட்டுப்பாடுகளை அரசு தீவிரமாக் கியது.

தொற்று பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகளில் பொதுமுடக்கம் அமுல்படுத்தப்பட்டு மக்கள் வீடுகளை விட்டு வெளியே வருவதற்கு தடை விதிக்கப்பட்டது. இது தவிர பணியிடங்கள் கட்டுப்பாடு, பொருட்களை வாங்குவதில் கட்டுப்பாடு என பல கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளன.

இதனால் அந்த நாட்டு மக்கள் கடும் அதிருப் தியில் இருந்து வந்த சூழலில் கடந்த 24 ஆம் திகதி ஜின்ஜியாங் மாகாணத்தின் தலைநகர் உரும்கியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.

கொரோனா கட்டுப்பாடுகளால் அந்த கட்ட டம் பாதியளவு பூட்டப்பட்டிருந்ததால் மக்கள் உடனடியாக வெளியேற முடியாமல் தீயில் சிக்கி உயிரிழந்ததாக குற்றம் சாட்டி மக்கள் போராட் டத்தில் குதித்தனர்.

பின்னர் இந்த போராட்டம் சீனாவின் பல்வேறு நகரங்களுக்கும் பரவியது. தலைநகர் பீஜிங், ஷ ாங்காய், உஹான் உள்ளிட்ட பல நகரங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகளை புறக் கணித்து போராட்டம் நடத்தினர். அதே போல் மக்களும் வீதிகளுக்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொரோனா கட்டுப்பாடுகளுக்கு எதிராக தொடங்கிய போராட்டம் பின்னர் அரசு எதிர்ப் புப் போராட்டமாக மாறியது. அந்த வகையில் கொரோனா கட்டுப்பாடுகளை திரும்பப்பெற கோரியும், ஜனாதிபதி ஜின்பிங் பதவி விலக வலியுறுத்தியும் கடந்த 4 நாட்களாக மக்கள் இரவு, பகலாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்த னர். இதனிடையே பொதுமக்களின் கோபத்தை தணிக்கும் விதமாக அதிகாரிகள் நேற்று முன் தினம் சில கட்டுப்பாடுகளை தளர்த்தினர்.

இந்த நிலையில் சீனாவில் கொரோனா கட்டுப்பாடுகள் மற்றும் அரசுக்கு எதிராக நடந்து வந்த போராட்டங்களை அதிகாரிகள் நேற்று முழுவதுமாக கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

போராட்டங்கள் நடந்து வந்த அனைத்து நகரங்களிலும் அதிகாலை முதலே அதிக அள வில் பொலிஸார் குவிக்கப்பட்டனர். அவர்கள் போராட்டம் நடத்த வீதிகளுக்கு வந்தவர்களை கலைந்துபோக செய்தனர்.

ஒரு சில நகரங்களில் பொதுமக்கள் தாமா கவே போராட்டத்தை கைவிட்டதாக சொல்லப் படுகிறது. அந்த வகையில் நேற்று சீனாவின் எந்தவொரு பகுதியிலும் போராட்டம் நடை பெறவில்லை என தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதற்கிடையில் சீனாவில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்கள் போராட்டத்தை கட்டுப் படுத்தும் விதமாக மாணவர்களை கட்டயமாக வீடுகளுக்கு அனுப்பியது.

அதேபோல் ஹொங்காங்கில் சீன அரசுக்கு எதிரான போராட்டங்கள் பரவுவதை தடுக்கும் விதமாக ஹொங்காங் முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப் பட் டது. (அ)



# வாரத்தில் 4 நாட்கள் மாத்திரமே வேலை!

## பிரிட்டனில் 100 நிறுவனங்களில் நடைமுறை

லண்டன், டிசெ.01

ஐரோப்பியாவில் சில நாடு கள், ஊழியர்களிடம் வாரத் தில் 4 நாட்கள் மாத்திரம் வேலைக்கு அழைக்கும் திட் டத்தை கொண்டு வந்து உள்ளன.

இந்நிலையில், இங்கிலாந் தில் சோதனை நடவடிக்கை யாக வாரத்தில் 4 நாட்கள் வேலை திட்டம் கடந்த ஜூன் மாதம் நடைமுறைப்படுத்தப் பட்டது. தொடர்ந்து 6 மாதங் கள் சோதனை அடிப்படையில் இத்திட்டம் செயற்படுத்தப் பட்டது. இதில் சுமார் 3,300 ஊழியர்கள் பங்கேற்று பணி யாற்றி வந்தனர். இதன் முடி வில் 88 சதவீத நிறுவனங்கள், இத்திட்டம் தங்கள் வணிகத் துக்கு சாதகமாக இருப்பதாக தெரிவித்தன. 15 சதவீதம் உற்பத்தித்திறன் உயர்ந்துள்ள தாகவும், மற்ற பணிகளில் எந்த மாற்றமும் இல்லை என்றும் தெரிவித்தன.

இந்த நிலையில் இங்கிலாந் தில் வாரத்தில் 4 நாட்கள் வேலை திட்டத்தில் 100 நிறுவ னங்கள் கையொப்பமிட்டுள் ளன. இந்த நிறுவனங்களில் சுமார் 2,600 பேர் பணியாற்றி வருகிறார்கள்.

இதில் பெரு நிறுவனங்க ளான எடம் வங்கி மற்றும் உலகளாவிய சந்தைப்படுத்து தல் நிறுவனமான ஆவின் ஆகியவையும் 4 நாட்கள் வேலை திட்டத்தில் கையொப் பமிட்டுள்ளன. இந்த 2 நிறுவ னங்களிலும் தலா 450 ஊழியர் கள் பணியில் உள்ளனர்.

இந்நிலையில், 100 இங்கி லாந்து நிறுவனங்கள் ஆயிரக் கணக்கான ஊழியர்களுக்கு ஊதியத்தை குறைக்காமல், நிரந்தரமாக 4 நாட்கள் வேலை திட்டத்தை அமுல்படுத்தவுள் ளமை குறிப்பிடத்தக்கது.(அ)

# மாவட்ட அபிவிருத்திச் சபை இனப்பிரச்னைக்கு தீர்வாகாது

## செல்வம் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ. 01

**தோல்வியடைந்த மாவட்ட அபிவிருத்தி சபை முறைமை நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்னைக்கு தீர்வாக அமையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த அரசாங்கத்தில் இனப் பிரச்னைக்கு தீர்வு தொடர்பாக அவதானம் செலுத்தாத முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தற்போது மாவட்ட அபிவிருத்திச் சபை ஊடாக தீர்வு என கருத்து வெளியிடுவது குறித்தும் செல்வம் அடைக்கலநாதன் அதிருப்தி வெளியிட்டார்.

சமஷ்டி அடிப்படையில் அரசியல் தீர்வு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் தோல்வியடைந்த மாவட்ட அபிவிருத்தி குழு பற்றி தற்போது பேசுவது கவலையளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம் அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் தரப்பினர் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்றும் ஒற்றுமை இல்லை என்பதால் தீர்வு சாத்தியமற்றது என குறிப்பிடும் நிலையை தமிழ்த் தரப்புக்கள் தோற்றுவிக்கக்கூடாது என்றும் செல்வம் அடைக்கலநாதன் கேட்டுக் கொண்டார். (அ)

# யாழில் போதைப்பொருளை பொதி செய்தவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், டிசெ. 01

தனது வீட்டில் வைத்து போதைப்பொருளை விற்பனை செய்யும் நோக்குடன் பொதியிட்டுக்கொண்டிருந்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் பகுதியை சேர்ந்த 24 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் தனது வீட்டில் வைத்து போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அவரது வீட்டை முற்றுகையிட்ட போது , போதைப்பொருளை விற்பனை செய்வதற்காக சிறு சிறு பொதியாக போதைப்பொருளை பொதியிட்டுக்கொண்டிருந்த வேளை கைது செய்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபரிடமிருந்து 56 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 1.56 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டதாகவும், சந்தேகநபரை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அமைதியின்மையால் வீடு இழந்த 76 எம்.பிக்களுக்கு வாடகை வீடுகள்

நாட்டில் கடந்த மே மாதம் முதல் ஏற்பட்ட அமைதியின்மையால் வீடுகள் மற்றும் சொத்துக்களை இழந்த 76 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். கலல்கொடவில் உள்ள வியத்புர வீடமைப்புத் திட்டத்தில் அவர்களுக்கான வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த வீடுகள் ஒரு வருட காலத்துக்கு வழங்கப்பட்டதாகவும் அதில் வசிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து மாத வாடகை வசூலிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இந்த வளாகத்தில் 106 வீடுகள் உள்ளதாகவும் வேறு பாராளுமன்ற உறுப்பினர்களும் தேவைப்பட்டால், அந்த வீடுகளில் வசிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வீடுகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் வாங்கலாம் என்றும் அவர்களது நிரந்தர வசிப்பிடமாக அதனை பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் அவர் கூறினார். (அ)

# வைத்தியசாலை ஊழியர் போதைப்பொருளுடன் கைது

கொழும்பு, டிசெ. 01

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் ஊழியர் ஒருவர் போதைப்பொருளுடன் வைத்தியசாலைக்கு அருகில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளதாக நுகேகொடை மிரிஹான பிரிவு ஊழல் எதிர்ப்பு பிரிவு தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சுகாதார உதவியாளர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபரிடமிருந்து 5 கிராம் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும் சுமார் ஒரு இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதியான 10 கிராம் கேரள கஞ்சாவும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த வைத்தியசாலை ஊழியர் ஒருவர் ஐஸ் போதைப்பொருள் மற்றும் கஞ்சாவை பொதி செய்து விற்பனை செய்வதாக நுகேகொடை பிரதேச ஊழல் ஒழிப்பு பிரிவின் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜனசாந்த கஹடதெனியவுக்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து இந்த கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது. (அ)

# பணவீக்கம் குறைகிறது

கொழும்பு, டிசெ. 01

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் வருடாந்த புள்ளி மாற்றத்தால் அளவிடப்படும் மேற்பரப்பு பணவீக்கம் குறைந்துள்ளது.

நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், நவம்பர் மாதத்தில் பணவீக்கம் 61 வீதமாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒக்ரோபர் 2022 இல் 66 வீதமாக பதிவு செய்யப்பட்டது.

இதே போக்கைப் பின்பற்றி, உணவுப் பிரிவில் ஆண்டுப் புள்ளி பணவீக்கம் ஒக்டோபரில் 85.6 வீதமாக இருந்து நவம்பரில் 73.7 வீதமாகக் குறைந்துள்ளது.

உணவு அல்லாத பிரிவில் ஆண்டுக்கு ஆண்டு புள்ளி பணவீக்கம் ஒக்ரோபரில் 56.3 வீதமாக இருந்து நவம்பரில் 54.5 வீதமாக குறைந்துள்ளது.

2021 ஒக்ரோபரில் இருந்து மேல்நோக்கிய போக்கைப் பின்பற்றிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் வருடாந்த புள்ளி மாற்றத்தால் அளவிடப்படும் பிரதான பணவீக்கம், கடந்த ஒக்டோபரில் முதல் தடவையாக கீழ்நோக்கிய போக்கைக் காட்டியது.



மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கணவன் படுகொலை! மனைவி படுகாயம்!!

கொழும்பு, டிசெ. 01

ஹிக்கடுவை, வேவல சந்தியில் மோட்டார் காரில் வந்த சிலர் நடத்திய வாள்வெட்டுத் தாக்குதலில் 31 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் அவரது மனைவி காயமடைந்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் ஹிக்கடுவை, நரிகம பிரதேசத்தில் வசிப்பவர்கள். வேலவ பிரதேசத்தில் அலங்காரக் கடை ஒன்றை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஹிக்கடுவை திராணகம பிரதேசத்தில் நடந்த தாக்குதல் சம்பவமொன்றிற்கு பழிவாங்குவதற்காக நடத்தப்பட்ட இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த பெண் காலி கராபிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹிக்கடுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# குஷானின் தொலைபேசி, வங்கி கணக்குகள் ஆய்வு செய்யப்படும்

கொழும்பு, டிசெ. 01

ஓமானுக்கு பெண்களைக் கடத்திய சம்பவம் தொடர்பில் பிரதான சூத்திரதாரியாக செயற்பட்டவர்களை கண்டுபிடிக்கும் இரகசிய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று முன் தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதான பணி இடைநீக்கம் செய்யப்பட்ட ஓமான் தூதரகத்தின் மூன்றாவது செயலாளரான ஈ.குஷானின் தொலைபேசி பதிவுகள் மற்றும் வங்கி கணக்கு பதிவுகள் ஊடாகவும் இந்த வலையமைப்பு தொடர்பான தகவல்களை தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கைது செய்யப்பட்ட நபர்களுக்கு சட்ட உதவிகளை பெற்றுக் கொடுக்கவும் இந்த கடத்தலில் ஈடுபட்டுள்ள முகவர்கள் பணம் செலவிட தயாராகி வருவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் மனித கடத்தலில் ஈடுபட்டவர்களிடம் விசாரணை நடத்தி முக்கிய சந்தேக நபர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள
யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் .நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும்
அனைத்து விளம்பரங்களும்
யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்
யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN news
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net
Tel: 0094 752 225 225

# தேர்தலொன்றை நடத்த முடியாவிட்டால் ஆணைக்குழு இருப்பதில் பயன் இல்லை

## அதன் தலைவர் நிமல் புஞ்சிஹேவா கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 01

**தேர்தல் ஒன்றினை நடத்த இயலாது என்றால் தேர்தல் ஆணைக்குழுவொன்று இருப்பதில் எந்த பிரயோசனமும் இல்லையென தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.**

மும்மொழியப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்மானங்களை முறைப்படுத்துவதற்காகவும் மக்கள் மயப்படுத்துவதற்காகவும் தேர்தல் ஆணைக்குழுவினால் அநுராதபுரம் ரந்திய ஹோட்டலில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாவட்ட கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்-

தேர்தலை நடத்துவதற்கு நிதி இல்லையென்பது எங்களுக்கு பிரச்சினை இல்லை. அந்த விடயத்தினை அரசாங்கம் பார்த்துக்கொள்ளும். அடுத்த வருடம் மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தவேண்டும். தேர்தல் ஆணைக்குழு என்ற வகையில் அதற்கான செயல்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கக்கூடிய மாகாண சபைகளை அதிகாரிகள் ஊடாக நிர்வகிப்பது குறித்து தேர்தல் ஆணைக்குழு எங்கும் உடன்படாது. மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தேர்தல் ஆணைக்குழு தொடர்ந்தும் இருக்கின்றது. இலங்கை பிரஜை அல்லாத ஒருவர் தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்கின்றார் என்றாலும் கூட தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டங்களின் பிரகாரம் அவரை நிராகரிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு இல்லை. அதற்கான தீர்மானத்தினை பெற்றுக்கொள்ள உயர் நீதிமன்றத்தினை நாடவேண்டிய நிலை காணப்படுகின்றது. ஆகவேதான், தேர்தல் சட்டங்களில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி இருக்கின்றன. வேட்புமனு தாக்கல் செய்யும் போது கட்சியினது செயலாளருடைய கையொப்பம் அல்லது சமாதான நீதவானுடைய உறுதிப்படுத்தல் இல்லை என்ற விடயங்கள் உள்ளிட்ட தொழினுட்ப கோளாறு காரணமாக வேட்புமனுவினை நிராகரிக்கும் விடயங்களுக்கு குறுகிய நேரத்துக்குள் திருத்தங்களை மேற்கொண்டு மீண்டும் வேட்புமனுவை வழங்கும் விதத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஆணைக்குழு யோசனைகளை முன்வைத்துள்ளது. வேட்பாளர்களை பொதுமக்கள்தான் நிராகரிக்கவேண்டும்-என்றார். (அ)

## சத்தான உணவு உண்ண ஒரு குடும்பத்துக்கு மாதம் ஒன்றரை இலட்சம் ரூபா தேவை!

### ஹரிணி அமரசூரிய எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 01

இலங்கையில் நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கு சத்தான உணவை உண்பதற்கு ஒரு இலட்சம் அல்லது ஒன்றரை இலட்சம் ரூபாய் தேவைப்படுகின்றது. ஆகவே எத்தனை குடும்பங்களுக்கு இவ்வாறான வருமானம் கிடைக்கின்றது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய கேள்வி எழுப்பியுள்ளார் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரவுகளை சுட்டிக்காட்டி பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

ஒரு இலட்சம் ரூபாய் வருமானம் பெறுபவர்களுக்கு 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக வரி விதிக்கும் யோசனை, எதிர்காலத்தில் நிலைமை மோசமாக்கும் என்றும் எச்சரித்துள்ளார்.

# அரசியல் தீர்வு பேச்சுக்கான அழைப்பை வரவேற்கிறோம்

## சந்திரகுமார் ஜனாதிபதிக்கு கடிதம்



கிளிநொச்சி, டிசெ. 01

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற நோக்கில் தமிழ் பேசும்தரப்பினருடன் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி எடுத்திருக்கும் நடவடிக்கைகளை, தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியென்ற வகையில் நாங்கள் வரவேற்கிறோம் என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள சிக்கல்களில் இருந்து விடுபடுவதற்கு பொருளாதார மீட்டெடுப்புடன், தமிழர்களில் அரசியல் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்றினை காண்பதும் முக்கியமானதாகும். இது தங்களைப்போன்ற துணிச்சலும் அர்ப்பணிப்பும் உறுதிப்பாடும் உள்ள தலைமைகளால் மட்டுமே இயலும் என்ற அரசியல் பட்டறிவின் அடிப்படையில், உங்களுடைய முன்னெடுப்புகள், தீவில் வாழக்கூடிய அனைத்து இன மக்களும், சர்வதேச கோட்பாடுகளின் வழி உரித்துடைய சுதந்திரங்களையும் உரிமைகளையும் அனுபவிப்பதற்கு வழிபிறக்கும் என்ற நம்பிக்கையை விதைத்திருக்கின்றன.

யுத்தம் முடிந்து 14 ஆண்டுகளாகிறது. இந்தக் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான நிவாரணங்கள் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். அரசியற் கைதிகளின் விடுதலை, காணாமலாக்கப்பட்டோரின் பிரச்னைக்குத் தீர்வு, உயிரிழப்புகளைச் சந்தித்த குடும்பங்களுக்கான இழப்பீடு, உடல் உறுப்புகளை இழந்தவர்களுக்கான வாழ்க்கைப்படி தொடக்கம் மீள் குடியேற்றம், மீள்நிலைப்படுத்தல், பொருளாதார இழப்பு, நில இழப்பு, தொழில் இழப்பு வரை அனைத்துக்கும் முறைப்படியான தீர்வுகள் காணப்பட்டிருக்கவேண்டும். எனினும் இது தொடர்பில் முன்னைய தலைமைகள் எடுத்திருந்த நடவடிக்கைகள் வெற்றிகரமானதாக அமையவில்லை. ஒருபுறம் பாதுகாப்பு தொடர்பான செலவீடுகள் தொடர்ந்து அதிகரிக்க, மறுபுறத்தில் அந்நியசக்திகளின் வேண்டத்தகாத அரசியல் தலையீடுகளால், எதிர்மறையான விளைவுகளை நாடு சந்திக்கவேண்டி நேர்ந்துள்ளது.

இனங்களுக்கிடையில் அவநம்பிக்கை நீடித்ததோடு, அனைவரும் வேண்டிநிற்கும் நிலைத்ததும் - நீடித்ததுமான அபிவிருத்தியை, யுத்தம் நிறைவுற்று தசாப்தம் கடந்தும் இலங்கையால் அடையமுடியவில்லை.

இலங்கை பல்லின மக்களைக் கொண்ட ஒரு நாடு என்ற வகையில், ஒவ்வொரு இனக்குழுவும் கொண்டிருக்கும் அடையாளங்களையும் சிறப்புரிமைகளையும் ஏனையவர்கள் மதித்து அங்கீகரிக்கும் போதுதான் நீடித்த அமைதிக்கான வாய்ப்புகள் உருவகின்றன. மேற்படி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான பொருத்தமான வழிமுறைகளை தங்களால் விடுக்கப்பட்டிருக்கும் பேச்சுவார்த்தைக்கான அழைப்பு ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், சமத்துவ கட்சி தங்களது முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதோடு, ஏற்புடைய அனைத்து வழிகளிலும் இணைந்து பங்காற்றும் என்பதையும் தெரிவித்து கொள்கிறேன்-என்றுள்ளது. (அ)

# மாவட்ட அபிவிருத்திச் சபையை தொட்டுப்பார்க்கக்கூட தயாரில்லை

## அமைச்சர் டக்ளஸ் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 01

பல தசாப்தங்களுக்கு முன்னர் தட்டிக்கழிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபையை தமிழ் மக்கள் தொட்டுப் பார்க்கக்கூட தயாராக இல்லை என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் இனம் தோற்று விட்டதாக யாருமே கருதக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வாக மாவட்ட அபிவிருத்தி சபையை பரிசீலிப்பது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்று முன் தினம் பாராளுமன்றில் தெரிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களை தீர்க்கும் வகையில், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக, மாகாணங்களின் அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன.

அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற முடியும் என்பதையே நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். அதுவே அனைத்து தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைச் சாத்தியமான வழிமுறையாகவும் இருக்கின்றது.

இவ்வாறான சூழலில் 80 களின் ஆரம்பத்திலேயே தமிழ் மக்களினால் ஏகோபித்த குரலில் தட்டிக்கழிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபை தொடர்பாக பிரஸ்தாபிப்பதற்கு நாம் தயாராக இல்லை.

2009 ஆம் ஆண்டு இந்த நாட்டில் நிறைவடைந்த யுத்தம் என்பது, இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னர் சிலரால் முன்னெடுக்கப்பட்ட தவறான வழிமுறைக்கு கிடைத்த தோல்வியாகவே அனைவரும் கருத வேண்டுமே தவிர, தமிழ் மக்கள் தோல்வியுற்ற சம்பவமாக அதனை யாரும் கருதக் கூடாது.

தமிழ் மக்கள் மத்தியிலும், சிங்கள மக்கள் மத்தியிலும் இருக்கின்ற சில இனவாத சக்திகள், தங்களின் அரசியல் நலன்களுக்காக, தமிழ் மக்கள் தோல்வியடைந்து விட்டார்கள் என்ற கருத்தின் அடிப்படையில் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. இதுவே பிரச்சினைகள் இன்னும் தீராமல் இருப்பதற்கு காரணமாக இருக்கின்றது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

எவ்வாறெனினும், தமிழ் மக்களின் நியாயமான நிலைப்பாட்டை தற்போதைய ஜனாதிபதி தெளிவாக புரிந்து வைத்திருக்கின்மை, பல்வேறு சந்தர்ப்பங்களில் அவரின் செயற்பாடுகளில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது-என்றார். (அ)

# 12 யாழ். வர்த்தகர்களுக்கு 3 இலட்ச ரூபாய் தண்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 01

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பலசரக்கு கடைகளில் காலாவதியான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த 12 உரிமையாளர்களுக்கு யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்று 3 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்துள்ளது.

யாழ்.நகர் பகுதியில் 06 பலசரக்கு கடைகள், குருநகர் பகுதியில் 05 பலசரக்கு கடைகள் மற்றும் வண்ணார்பண்ணை பகுதியில் ஒரு கடை ஆகிய 12 கடைகளிலும் காலாவதியான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த நிலையில் அதன் உரிமையாளர்களுக்கு எதிராக பொது சுகாதார பரிசோதகர்களால், யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று புதன்கிழமை விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது, 12 வர்த்தகர்களும் தமக்கு எதிரான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து , 12 பேருக்கும் 3 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த மேலதிக நீதவான் , சான்று பொருட்களாக மன்றில் ஒப்படைக்கப்பட்ட காலாவதியான பொருட்களை அழிக்குமாறும் உத்தரவிட்டார். (அ)

## அரசியல்...

அரசாங்கங்களோடு பேச்சு நடத்தி வந்திருக்கிறோம். அதன்பின் ஏற்படுகின்ற அரசியல் குழப்பங்கள் காரணமாக பேச்சுகள் பயனளிப்பதில்லை. அல்லது இறுதிக் கட்டத்தில் குழம்பி விடுகின்றன. இதற்கு காரணமாக அரசியல் மாற்றங்கள் அமைந்திருக்கின்றன. பிராந்திய அரசியலில் ஏற்படும் மாற்றங்கள், உள்ளக அரசியலில் குறிப்பாக தென்னிலங்கையில் ஏற்படும் மாற்றங்கள், அதே போன்று தமிழர் தரப்பில் ஏற்படுகின்ற மாற்றங்கள் என்று வகைப்படுத்தலாம்.

சந்திரிகா அம்மையார் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட அரசியல் தீர்வு இறுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் காரணமாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டதோடு முடிவுக்கு வந்தது. அதன் தொடர்ச்சியாக ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன. முக்கியமாக சர்வதேச நாடுகள் இதற்கு ஆதரவை வழங்கியிருந்தன. அதன் பின்னர் தமிழ் அரசியலில் பேரம் பேசும் சக்தி மௌனிக்கப்பட்டு ஏற்பட்ட மாற்றங்களால் இந்த முயற்சியை தொடர முடியவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தில் அரசியல் யாப்பு மாற்றத்தையே தோற்றுவித்து இறுதிச்சுற்று வரை சென்ற அரசியல் தீர்வு விடயம் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் முடிவுக்கு வராமல் போனது.

தற்போது தமிழ் தரப்பில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் பிரதிநிதித்துவ மாற்றங்கள் எமது பேரம் பேசும் பலத்தை வெகுவாகப் பாதித்திருக்கிறது. தெற்கில் ஏற்பட்ட அரசியல் மாற்றமும் தீர்வுக்கான தெளிவான பாதையை திறக்கவில்லை. அதனை வலியுறுத்த எமது பலமும் போதாமல் இருந்தது.

இன்று ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலை எமது அரசியல் தீர்வுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி வருவதாக தோற்றம் தருகிறது. பேச்சுக்கு நம் தரப்பு தயாராகின்ற போதிலும், இதைக் கையாளும் ஒருமித்த பொறிமுறை எம்மிடம் இல்லை. பேச்சுகள் தோல்வி காண்பதற்கான காரணங்களை அனுபவப் பாடங்களாகக் கொண்டு அவற்றை தவிர்க்க அல்லது எதிர்கொள்ள சரியான பொறிமுறையை நாம் ஏற்படுத்துவதே எம் இனத்துக்கு நலன் பயக்கும்.

தமிழ்த் தேசியப் பரப்பில் செயலாற்றி வரும் அனைத்து கட்சிகளும் எமது அரசியல் தீர்வு சம்பந்தமான ஒருமித்த நிலைப்பாட்டை கொண்டுள்ளன. தீர்வின் இறுதி வடிவம், கட்டமைப்பு சமஷ்டி முறையில்தான் அமைய வேண்டும் என்பதை எல்லோரும் மாறாத நிலைப்பாடாகக் கொண்டுள்ளோம். அதேநேரம் அதற்கான விடயங்களைக் கையாள எமது அரசியல் தீர்வுக்கான நிலையான பொறிமுறையுடன் கூடிய கட்டமைப்பை நாம் உருவாக்க வேண்டும்.

சர்வதேச, பிராந்திய, தென்னிலங்கை, மற்றும் தமிழர் தரப்பில் ஏற்படும் அரசியல், பிரதிநிதித்துவ மாற்றங்களால் இந்தப் பொறிமுறையின் செயல்பாடுகள் குழப்பம் அடையமாட்டாது. மாறாக விட்ட இடத்தில் இருந்து பேச்சுகளை தொடர்வதற்கு வழி அமைக்கும்.

கடந்த காலங்களில், தெற்கிலுள்ள அரசாங்கங்கள் முன்மொழியும் அல்லது அழைக்கும் தற்காலிக கட்டமைப்புகளில் நாம் கலந்து கொள்வதாக அமைந்துள்ளதே தவிர, எமது இனத்தின் உறுதியான அரசியல் தீர்வுக்கான ஒரு பொறிமுறையை நாம் கொண்டிராமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானது. இதை நாங்கள் இப்போது தீர்க்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. கூட்டமைப்புகள், கூட்டணிகள், கட்சிகள், கட்சி நிலைப்பாடுகள், கொள்கைகள், தேர்தல் நோக்கங்கள் என்பவற்றைத் தாண்டி இந்த பொறிமுறையை வகுத்து உருவாக்கி, செயல்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றுவது காலத்தின் தேவை.

எமது இனத்தின் அரசியல் தீர்வுக்கான பொறிமுறையை ஏற்படுத்தும் முயற்சிக்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளினதும், தரப்புகளினதும் ஆதரவைக் கோரி நிற்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## மாவட்ட...

சிங்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்த பதில், அர்த்தத்தை சிதைக்கும் விதத்தில் பல ஊடகங்களில் செய்திகளாக வெளியாகியுள்ளன.

2023ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில், மைத்திரிபால சிறிசேனவின் கருத்துக்கு நேற்று பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மாகாண சபைகளில் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை ஸ்தாபிக்கத் தயார் எனத் தெரிவித்தார்.

அதுதவிர, மாகாண சபைகள் கலைப்பு தொடர்பில் ஜனாதிபதி எந்த கருத்தையும் வெளியிடவில்லை. நிறைவேற்றுத் தீர்மானங்களை அமுல்படுத்துவதில் அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடையில் சரியான ஒருங்கிணைப்பை பேணுவதற்கான களமாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் செயற்படும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நிலைப்பாடாகும்.

இதன் மூலம், வளர்ச்சிப் பணிகள் முறையாக நடைபெறுவதுடன், நிதி வீண்விரயம் மற்றும் தாமதங்கள் தவிர்க்கப்படும் - என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## சிறந்த...

நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே. கருணாகரம் உள்ளிட்ட பிரதேச செயலாளர்கள் சிலர் சூம் செயலி ஊடாக இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெருகல் ஆறு முதல் மட்டக்களப்பு வரையான கடற்கரையை அண்மித்த அரச மற்றும் தனியார் இடங்களை அடையாளம் காண்பது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறித்த பகுதியை சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்து 2023 ஆம் ஆண்டில் மட்டக்களப்பை சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்றுவதே இதன் நோக்கம் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எக்ஸ்பிரஸ்...

கப்பட்டுள்ளன. நீதிவான் விசாரணைகளில் இது வெளிப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தி நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த சி. சி. ரீ. வி. காட்சிகள் அழிக்கப்பட்டதால் இந்தக் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக நட்டஈட்டை பெறுவதில் பிரச்னை எழுந்துள்ளது. இதனை அரசாங்கமே அழித்தது - என்றும் தெரிவித்தார். (ஐ)

## கடலட்டை...

திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

பருத்தித்தீவில் புதிதாக மேலும் கடலட்டை பண்ணைகள் அமைக்கப்படுகின்றன என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர். (ஐ)

## இந்தியாவுக்கு...

விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்,

இலங்கை 2016 ஆம் ஆண்டு முதல் மலேரியா அற்ற நாடாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மலேரியாத்தொற்று பரவவில்லை.

எனினும் கடந்த ஆண்டுகளில் மலேரியா பரம்பல் அதிகமாக காணப்படும் இந்தியா மற்றும் ஆபிரிக்க நாடுகள் போன்ற வேறு நாடுகளில் இருந்துவரும் பயணிகளில் மலேரியா தொற்றுடன் பலர் இனங்காணப்பட்டுள்ளனர். இது மலேரியா அற்ற நாடாக எமது நாட்டை பேணுவதில் நாம் எதிர் நோக்கும் மிகப்பெரிய சவாலாகும்.

எனவே, மலேரியா நோய் அதிகம் காணப்படுகின்ற இந்தியா போன்ற நாடுகளுக்கு ஐயப்பன் தல யாத்திரைக்கோ அல்லது வேறு தல யாத்திரைகளுக்கோ செல்பவர்கள் முற்காப்பாக தடுப்பு மருந்துகளை ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே உரிய முறையில் உள்ளெடுப்பதன் மூலம் தமக்கு மலேரியா தொற்று ஏற்படுவதை தடுக்கலாம்.

எனவே, இந்தியா போன்ற நாடுகளுக்கு செல்ல இருப்பவர்கள் மலேரியா நோயில் இருந்து தம்மை காத்துக்கொள்வதற்காக தமது பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகரை தொடர்பு கொள்வதன் மூலம், அருகில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலோ அல்லது சுகாதார கிராமம், பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய மலேரியா தடை இயக்க பணிமனையிலோ (தொலைபேசி இலக்கம் 021- 222 7924) தடுப்பு மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் இவர்கள் மலேரியா பரம்பல் அதிகமாக காணப்படும் நாடுகளில் தங்கி இருக்கும் காலப்பகுதியில் வாரத்துக்கு ஒருமுறை மட்டும் தடுப்பு மருந்துகளை தொடர்ந்து உள்ளெடுப்பதோடு பயணம் நிறைவுற்று நாடு திரும்பிய பின்பும் நான்கு வாரங்கள் நிறைவுறும்வரை வாரத்துக்கு ஒருமுறை தடுப்பு மருந்துகளை தொடர்ந்து எடுக்கவேண்டும்.

ஒருவருடத்துக்குள் காய்ச்சல் ஏற்படின் உங்கள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு சென்று தங்கள் பயணம் தொடர்பான விபரங்களை வைத்தியருக்கு வழங்குவதுடன் மலேரியா நோய்க்காக குருதியை பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

மேலும், இவ்வாறான பயணங்களை மேற்கொள்ளும் யாராவது குருதிக் கொடையாளர்களாக இருந்தால் மூன்று வருடங்களுக்கு இரத்ததானம் வழங்க முடியாது.

மலேரியாவை பரப்பும் அனோபிலிஸ் வகை நுளம்புகள் பெருமளவாக எமது பிரதேசத்தில் காணப்படுகின்றன. மேலும் அண்மைக்காலங்களாக நகர்ப்புற மலேரியாவை பரப்பக் கூடிய அனோபிலிஸ் ஸ்டெபென்சி வகை நுளம்புகளும் எமது பிரேதேசங்களில் காணப்படுவதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையானது மலேரியா நோயை ஏற்படுத்தும் பிளாஸ்மோடியம் வகை ஒட்டுண்ணிகளை மனித உடலிலிருந்தும் அதை காவிப்பரப்பும் நுளம்புகளில் இருந்தும் ஒழித்ததன் மூலமே மலேரியா அற்ற நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது.

எனவே காவிகள் பெருமளவாக காணப்படும் எமது பிரதேசத்தில் மலேரியா நோய்க்காக ஒட்டுண்ணியுடன் ஒருவர் இருந்தாலே அவ் இடத்தில் மலேரியா மீண்டும் விரைவாக பரவும் அபாயம் உள்ளது.

உங்களில் அல்லது தெரிந்தவர்களில் யாராவது இந்தியா, போன்ற நாடுகளுக்கு தல யாத்திரைகள் சென்று வந்திருப்பின் அருகில் உள்ள மருத்துவமனை ஏதேனும் ஒன்றில் அல்லது சுகாதார அதிகாரி காரியாலயத்தை அணுகி மலேரியா நோய்க்கான குருதி பரிசோதனையை செய்துகொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இலங்கையை மலேரியா அற்ற நாடாக தொடர்ந்தும் பேணுவதற்கு அனைவரும் ஒத்துழைப்போம் - என்றுள்ளது. (ஐ-03)

## சுகாதார...

கோடி டொலரில் மீதமுள்ள 35 கோடி டொலரிலிருந்தே இந்தத் தொகை சுகாதார துறைக்கு அமைச்சரவையால் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அந்நிய செலாவணி நெருக்கடியால் இலவச சுகாதார தேவையை பூர்த்தி செய்வதில் பெரும் நெருக்கடி ஒழுந்துள்ளது. இந்த சூழலில் தனியார் மருத்துவமனைகளில் அதிக கட்டணம் வசூலிக்கப்படுவது தொடர்பிலும் அமைச்சரவை ஆலோசனைக் குழு கேள்விகளை எழுப்பியது. (ஐ)

## உறுப்புரிமையை...

இலங்கை கிரிக்கெட் சபைக்கு ஐ. சி. சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி அனுப்பியுள்ள சிறப்பு கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த அரசியல் தவறான நடவடிக்கைகளுக்கு முகம்கொடுக்கும் வகையில் இடைக்கால கிரிக்கெட் அணி ஒன்று நியமிக்கப்பட்டால் இலங்கை தனது ஐ.சி.சி உறுப்புரிமையைகூட இழக்க நேரிடும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பில், விளையாட்டுத் துறை அமைச்சர் மற்றும் ஏனையோரின் கவனத்துக்கு கிரிக்கெட் சபை கொண்டு சென்றுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியில் அரசியல் தலையீடு உள்ளதா என்று ஐ. சி. சி. விசாரணை நடத்தினால் இலங்கைக்கு பெரும் பாதிப்பு ஏற்படும். இதன் மூலம் ஐ. சி. சி. போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலைமையும், நிதியுதவியும் நிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-சி)

## இரண்டு...

கப்பட்ட போதிலும், மின்சார சபையின் நட்டத்தை ஈடுகட்ட அது போதாது.

எனவே, தற்போது மின்சார கட்டணத்தை அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை அங்கீகரித்த மின்சார கட்டண அதிகரிப்பு தொடர்பான முன்மொழிவுகள் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அவர் தேசிய பேரவை உப குழுவுக்கு மேலும் அறிவித்துள்ளார்.

இதேவேளை, மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இதுவரை பரிசீலிக்கவில்லை என்று அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார். (ஐ-சி)

ஈழநாடு
Eelanadu

# உலகக் கிண்ண உதைபந்தாட்டம் 16 அணிகள் சுற்றுக்கு ஆஸி. தகுதி!



டோஹா, டிசெ. 01

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் 16 அணிகள் சுற்றுக்கு அவுஸ்திரேலியா தகுதி பெற் றுள்ளது. இதேசமயம், நடப்பு சம்பியனான பிரான்ஸ் துனீசியாவிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்தது.

கட்டாரில் நடக்கும் உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் குழுநிலை போட்டிகள் கிட்டத்தட்ட இறுதியை எட்டுகின்றன. இந்நிலையில், நேற்றும் சமநேரத்தில் இரு போட்டிகள் நடந்தன.

குழு டி அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டி ஒன்றில் நடப்பு சம்பியனான பிரான்ஸை துனீசியா எதிர்கொண்டது. முதல் பாதி ஆட்டத்தில் பிரான்ஸ் ஆதிக்கம் செலுத்தினாலும் அந்த அணியால் கோல் அடிக்க முடியவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் துனீசியாவின் பாபி காஷ்ரி 58ஆவது நிமிடத்தில் கோல் அடித்து பிரான்ஸுக்கு அதிர்ச்சி கொடுத்தார்.

பதில் கோல் அடிக்க பிரான்ஸ் கடுமையாக முயன்ற போதும் துனீசியாவின் நுட்பமான ஆட்டத்திறனால் அது கைகூடவில்லை. இறுதியில் 1 - 0 என்ற கோல் கணக்கில் துனீசியா வெற்றி பெற்றது.

பிரான்ஸ் அணி ஏற்கனவே 16 அணிகள் சுற்றுக்கு தகுதி பெற்றுவிட்டது. இந்தத் தோல்வி அந்த அணியை பாதிக்காது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், மற்றைய போட்டியில் அவுஸ்திரேலியாவை டென்மார்க் எதிர்கொண்டது.

முதல் பாதி ஆட்டம் கோல் எதுவும் போடப்படாமலே முடிவடைந்தது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் - போட்டியின் 60ஆவது நிமிடத்தில் அவுஸ்திரேலியாவின் மத்தியூ லெக்கி கோல் அடித்து அசத்தினார்.

அதன் பின்னர் இரு அணிகளும் கடுமையாக மோதியபோதும் கோல் அடிக்க முடியவில்லை. இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலியா அணி 16 அணிகள் சுற்றுக்கு தகுதி பெற்றது. (ஐ)



## 16 அணிகள் சுற்றுக்குள் நுழைந்தது அமெரிக்கா!

டோஹா, டிசெ. 01

அரசியலில் தனது பரமவைரி என்று கூறப்படும் ஈரானை வெற்றி கொண்டு 16 அணிகள் சுற்றுக்கு தகுதி பெற்றது அமெரிக்கா.

நேற்று நள்ளிரவு நடைபெற்ற போட்டியில் 38ஆவது நிமிடத்தில் அமெரிக்காவின் கிறிஸ்ரியன் பியூலிசிக் கோல் அடித்தார்.

எனினும், அவர் கோல் அடித்த சிறிது நேரத்தில் ஈரான் கோல் காப்பாளருடன் மோதுண்டார். இதனால், அவர் வயிற்றுப் பகுதியில் கடும் உபாதைக்கு உள்ளானார். இதையடுத்து, அவர் மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பப்பட்டார். பின்னர் அவர் களமிறங்கவில்லை.

முதல் பாதி ஆட்டம் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது. இரண்டாவது பாதி ஆட்டத்திலும் அமெரிக்காவின் ஆதிக்கம் ஓங்கியிருந்தது. அந்த அணி கோல் அடிக்கப் பல முயற்சிகளை எடுத்தபோதும் அது தோல்வியில் முடிவடைந்தது. இது போலவே ஈரானின் முயற்சிகளும் தோற்றுப் போயின.

இறுதியில் 1 -0 என்ற கோல் கணக்கில் அமெரிக்கா வெற்றி பெற்றதுடன், 16 அணிகள் சுற்றுக்கு முன்னேறியது. (ஐ)

## 16 அணிகள் சுற்றுக்கு இங்கிலாந்தும் தகுதி!



டோஹா, டிசெ. 01

மார்க்கஸ் ரஷ்போர்ட் , பில் போடன் ஆகியோரின் அதிரடி கோல்களால் வேல்ஸை வென்றது இங்கிலாந்து. இந்த வெற்றியின் மூலம், உலகக் கிண்ண 16 அணிகள் சுற்றில் செனகலை எதிர்த்தாடவுள்ளது இங்கிலாந்து.

மேலும், இந்த வெற்றியுடன் பி குழுவில் 7 புள்ளிகளுடன் தோல்வி அடையதாக அணியாக இங்கிலாந்து முதலாம் இடத்தைப் பெற்றது.

போட்டியின் முதல் பாதியில் இங்கிலாந்து கோல் போடுவதற்கு எடுத்த முயற்சிகளை வேல்ஸ் தடுத்த வண்ணம் இருக்க இடைவேளையின்போது கோல் எதுவும் போடப்பட்டிருக்கவில்லை.

எனினும், இடைவேளைக்குப் பின்னர் 50, 51ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களைப் புகுத்தி இங்கிலாந்து முன்னிலை அடைந்தது. முதலாவதாக இங்கிலாந்துக்கு கிடைத்த ப்றீ கிக் மூலம் ரஷ்போர்ட் அலாதியான கோல் ஒன்றைப் போட்டார். ப்றீ கிக் மூலம் இங்கிலாந்துக்காக ரஷ்போர்ட் போட்ட முதலாவது கோல் இதுவாகும்.

அத்துடன், இந்த வருட உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் ப்றீ கிக் மூலம் போடப்பட்ட முதலாவது கோலாகவும் அது அமைந்தது.

இந்த கோலால் உற்சாகம் அடைந்த இங்கிலாந்து அடுத்த நிமிடமே மேலும் ஒரு கோலைப் போட்டது. இங்கிலாந்து அணித் தலைவர் ஹெரி கேன் தட்டிக் கொடுத்த பந்தை போடேன் 6 யார் தூரத்திலிருந்து இலகுவாக கோலாக்கினார்.

போட்டியின் 68ஆவது நிமிடத்தில் பிலிப்ஸ் பரிமாறிய பந்தை பெற்றுக்கொண்ட ரஷ்போர்ட் மூன்று எதிரணி வீரர்களைக் கடந்து சென்று மிகவும் அருமையான கோலைப் போட்டு இங்கிலாந்தின் கோல எண்ணிக்கையை 3 ஆக உயர்த்தினார்.

உலகக் கிண்ண இறுதிச் சுற்று வரலாற்றில் இங்கிலாந்தின் 100ஆவது கோலாக அது அமைந்தது. (ஐ)

## புதிய விடியல் உதைபந்தாட்டம் ஹென்றீஸ், சென். லூட்ஸ் வெற்றி!

யாழ்ப்பாணம், டிசெ. 01

புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரில் யங்ஹென்றீஸ், சென். லூட்ஸ் அணிகள் வெற்றி பெற்றன.

டான் தொலைக்காட்சி குழுமம் யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்குடன் இணைந்து புதிய விடியல் உதைபந்தாட்டத் தொடரை நடத்துகிறது. இதில், நேற்று துரையப்பா பொது விளையாட்டரங்கில் நேற்று நடந்த போட்டிகளில் ஒன்றில் இளவாலை யங் ஹென்றீஸ் - பலாலி விண்மீன் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் 4 - 0 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றீஸ் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் சென். லூட்ஸ் அணியும் பொருதின. சமபலம் நிறைந்த இந்தப் போட்டயில் இரு அணிகளும் முதல் பாதி ஆட்டத்திலேயே கோல் அடித்தன. ஆனாலும், இரண்டாவது பாதி ஆட்டத்தில் கோல் எதையும் இரு அணிகளும் அடிக்கவில்லை. இதனால், ஆட்டம் 1 - 1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

எனினும், சமநிலை தவிரப்பு உதை (பெனால்டி) மூலமாக சென். லூட்ஸ் அணி வெற்றி பெற்றது.

இன்றையதினம்

இன்று வியாழக்கிழமை அணிகள் தங்கள் சொந்த மைதானப் பகுதிகளில் சுற்றுப் பயணம் வரவுள்ளன. இதன்படி காலை 9.30 மணிக்கு சென். பிலிப்ஸ் அணி பண்ணை - அல்லைப்பிட்டிக்கும், முற்பகல் 11.30 மணிக்கு சென். நீக்கிலஸ் அணி நாவாந்துறைக்கும் பிற்பகல் 3.30 மணிக்கு சென். அன்ரனிஸ் அணி பாசையூருக்கும் ஆதரவு தேடிப் பயணிக்கவுள்ளன. (ஐ)

தேவை

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் விளம்பர பகுதியில் பணியாற்றுவதற்கு ஆட்கள் தேவை.
(பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு :
077 311 9298, 075 313 2805

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.